

மக்கள் சுயராஜ்யம்

ஜெயப்பிரகாஷ் நாராயண்

2056

2056

சர்வோதயப் பிரசுரம்

ஜெயப்பிரகாஷ் நாராயண்

எழுதிய

மக்கள் சுயராஜ்யம்

"...அதை நடத்திக் காட்டுவதன் மூலம் இந்தியா உண்மை ஜனநாயக சாத்திரத்தை உருவாக்குவதாக!"

—மகாத்மா காந்தி

மக்கள் சுயராஜ்யம்

ஜெயப்பிரகாஷ் நாராயண்
எழுதியது

சர்வோதயப் பிரசுராலயம்
(அகில பாரத சர்வசேவா சங்கம்)
தஞ்சாவூர்

முதற்பதிப்பு: ஜனவரி 1962

விலை : ரூ. 1.

Kabeer Printing Works, Madras (4611)

பதிப்புரை

நாட்டின் பல பிற ராச்சியங்களிற்போல் நம் தமிழ் நாட்டிலும் ஆட்சியை முழுதும் ஜனநாயக மாக்கக் கருதி கிராமங்களில் தொடங்கி மாவட்டம் வரை பஞ்சாயத்து ஆட்சி அமைக்கப்பட்டிருக் கிறது. இதை மாவட்டத்தோடு நிறுத்தாது இராச்சியத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் கொண்டு செல்லவேண்டும், அதற்கான நடவடிக் கைகளை மக்கள் வரும் பொதுத் தேர்தலிலேயே இயன்ற அளவு எடுக்க வேண்டும் என்ற தம் கருத்தை திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இந்நூலில் தக்க காரணங்களுடன் விளக்கி வற் புறுத்தியிருக்கிருர் ; அமைந்துள்ள பஞ்சாயத்து ஆட்சியும் பொருளுள்ளதாய், பயனளிப்பதாய் ஆவதற்குச் செய்யவேண்டியவை எவை என்பதை யும் விரிவாகவும் தெளிவாகவும் கூறியிருக்கிருர்.

இது ஆங்கிலத்தில் வெளிவந்த அடியிலேயே இதைத் தமிழிலும் வெளியிட விரும்பியிருந்தும் பல காரணங்களினுல் அது இப்போதுதான் நிறை வேறுகிறது.

பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் தமிழ் மக்களுக்கு இது பயன்பட வேண்டுமென்பது எம் ஆவலாகும்.

தஞ்சாவூர்
12-1-62

சர்வோதயப் பிரசுராலயம்

பொருளடக்கம்

		பக்கம்
முன்னுரை	...	vii
I. தலைகீழ் சுயராஜ்ய அமைப்பு	...	1
II. பஞ்சாயத்து ஆட்சி	...	14
III. பொருளாதார ஏற்பாடுகள்	...	44
IV. ஜனநாயகம் அமுலாதல்	...	55
V. இடைக்காலமும் பொதுத்தேர்தலும்	...	68

முன்னுரை

சிறிது காலத்திற்கு முன் நான் சொந்த முறையில் 'இந்திய ஆட்சிமுறையின் புனரமைப்பு' (Reconstruction of Indian Polity) என்ற தலைப்பில் கட்டுரையொன்று தயாரித்து பலருக்கு அனுப்பி வைத்திருந்தேன். பிறகு அதிலுள்ள விஷயங்களை ஆராயவும் அவை பற்றிப் பேசவும் பல அரங்குகளும் சிறு கூட்டங்களும் நம் நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடந்திருப்பதோடு, பல இந்திய–வெளிநாட்டு நண்பர்கள் அது பற்றிய தம் யோசனைகளையும் அதில் தாம் கண்ட குறைகளையும் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றுள் சில ஆங்கில வார இதழான 'பூதானி'ல் வெளியாகியுள்ளன.

கட்டுரையை நான் பிரசுரிக்கவில்லையாயினும் அதன் சில பகுதிகள் பத்திரிகைகளில் வெளிவந்து அபிப்பிராயங்களும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

கருத்தரங்குகளும் நண்பர்கள் அனுப்பி வைத்த யோசனைகளும் விமரிசனங்களும் எனக்கு மிகவும் உதவியாயிருந்திருக்கின்றன. இவ்வகையில் சேர்ந்துள்ள காகிதங்கள் ஏராளமாயிருப்பதால் அவை முழுவதையும் படித்து சாரத்தை கிரகித்துக் கொள்வதற்கு எனக்கு சிறிது காலம் பிடிக்கும்.

என் கட்டுரையில் கண்ட முக்கியமான விஷயம் எதையும் மாற்றுவதற்குக் காரணமில்லையாயினும், பல பிற விஷயங்கள் பற்றிய என் கருத்துக்கள் மாறிவிட்டதோடு, அதில் விஷயங்கள் தொகுக்கப்பட்டுள்ள" முறையையும் முழுதும் மாற்றிவிட வேண்டுமென்று இப்போது உணர்கிறேன். மேலும்,

கட்டுரைக்குள்ள சிறிய இடத்திற்குள் நான் மிகப் பல விஷயங்களைப் புகுத்த முயன்றிருப்பது சரி யல்ல, அதனால் காரணமின்றி பலருக்கு தப்பபிப் பிராயம் ஏற்பட்டிருக்கிறது என்பது எனக்குத் தெளிவாகிவிட்டது.

நான் மிகவும் முக்கியமானதென்று கருதும் பெரிய மக்கள் இயக்கமொன்றில் ஈடுபட்டிருப்பது காரணமாக வேறு எதற்குமே பொழுது அதிகம் கிடைப்பதில்லையாகையால் என்னால் எப்பொழுது அக் கட்டுரையைத் திரும்ப எழுதி வெளியிட இயலுமோ சொல்ல முடியாது. ஆனால் பிரஸ்தாப விஷயத்தில் எனக்குள்ள சிரத்தை பேசி எழுது வதோடு நிற்பதல்லவாகையாலும், அதை உடனே அவசரமாக மக்கள் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று நான் கருதுவதாலும் அந்த முதல் கட்டுரையில் விவாதிக்கப்பட்டுள்ள முக்கிய விஷயமான நாட்டின் அரசியல் நிறுவனங்களையும் ஆட்சி முறையையும் திருத்தி அமைத்து-அவற்றை ஜனநாயகத்தோடு பொருந்துபவையாய், ஆற்றல் உள்ளவையாய், நிலைத்தவையாய், அர்த்தமுள்ள வையாய் ஆக்குவதற்கான யோசனைகளையும் அவற்றின் காரணங்களையும் இதில் கூற முன்வந் திருக்கிறேன்.

இப்பொழுதைக்கு இதில் தத்துவம், சமூக நலன், பொருளாதாரம் முதலிய அம்சங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, தவிர்க்கவியலாத விடங் களில் மட்டுமே அவற்றைப் பிரஸ்தாபிப்பேன். ஆனால் எந்த நாட்டின் அரசியலமைப்பும் அதன் சமூக அமைப்பு, மக்கள் வாழ்க்கை முறை, அவர்கள் கருத்தின் போக்கு ஆகியவற்றோடு பின்னிப் பிணைந்தே இருக்குமென்பதை மட்டும் சொல்லியாக வேண்டியுளது.

விஷயத்திற்கு வருமுன் இரண்டு விஷயங் களை சுருக்கமாய்க் கூறி விடுகிறேன். முதலாவது,

கட்டுரையை விமரிசனம் செய்துள்ள ஒரு சாரா ரைப் பற்றியது. அவர்கள் சொல்லியிருப்பதன் முக்கிய அம்சம், 'நான் ஒரு ஜனநாயக விரோதி; இந்திய ஜனநாயகத்தின் அடிப்படையை பரவ லாகவும் ஆழமாகவும் ஆக்குவதாகப் பாவனை செய்து கொண்டு அதைக் குழி தோண்டிப் புதைப் பதே என் உண்மை நோக்கம்' என்பது. இம்மாதிரி எடுத்த எடுப்பிலேயே ஒருவர் நாணயத்தையும் யோக்கியப் பொறுப்பையுமே சந்தேகிப்போருக்கு எப்படி பதில் சொல்லுவது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆயினும் தப்பபிப்பிராயங்கள் மேலும் வளராதிருக்க வேண்டி, மனித சுதந்திரத் திலும் ஜனநாயக வாழ்க்கை முறையிலும் எனக் குள்ள என்றும் அழியாத, மாருத உறுதியையும் நம்பிக்கையையும் இந்த சந்தர்ப்பத்தில் வலி யுறுத்தி வெளியிட விரும்புகிறேன். நான் சில ஆண்டுகளுக்கு முன் வெளியிட்ட கீழே குறித் துள்ள வார்த்தைகளில் அன்றுபோல் இன்றும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன், என்றென்றும் கொண்டிருப்பேன்:

"எனக்கு சுதந்திரம் இனி என்றுமே விட முடியாத ஒரு பித்தம் போல் ஆகிவிட்டது. நான் வயிற்றுச் சோற்றுக்காகவோ, அதிகாரம் பெற வேண்டியோ, பாதுகாப்புக்காகவோ, முன்னுக்கு வரக் கருதியோ, அரசாங்கத்தின் மதிப்பைப் பெறவோ என் சுதந்திரம் சிறிதும் குறைக்கப்படு வதற்கு ஒருப்படேன்."

—"*From Socialism to Sarvodaya*"

இரண்டாவது, நான் இப்போது விவரித் துள்ள கருத்துக்களுக்கு ஆதி ஜன்ம கர்த்தா வான காலஞ்சென்ற திரு. எம். என். ராய் அவர்கள் பெயரை என் கட்டுரையில் எங்குமே குறிப்பிடாதது பற்றியது.* இவ்விஷயம் நான் உரிமையோடு முழு ஆதரவை எதிர்பார்க்கும் வட்டாரங்களில் பெரிய

தப்பபிப்பிராயம் தோன்றக் காரணமாகி விட்டது. அவர்களுள் பலர் எனக்கு நெருங்கிய நண்பர்களாகையால், என்னை நன்கு தெரிந்து கொண்டுள்ள அவர்களுக்கு காலப் போக்கில் என் கருத்துக்கள் மாறி இப்பொழுதைய நிலையை எய்திருப்பதற்கு ராய் எவ்வளவு தூரம் காரணமென்பதும், அவர் கருத்துக்களை ஏற்றுக் கொள்வது எனக்குச் சில சமயங்களில் சிரமமாயிருந்தும் நான் அவருக்கு எவ்வளவு மதிப்பளித்து வந்திருக்கிறேனென்பதும் தெரியும். எந்தக் காலத்திலுமே எந்த அரசியல் தத்துவத்தையும் நான் சொந்தமாய்க் கண்டுபிடித்து விட்டதாய்க் கூறியதே இல்லை. நான் ராய்க்கு மட்டுமல்லாது இன்னும் எத்தனையோ பேருக்கு—அவர்களுள் மிகவும் அதிகமாய் காந்தியடிகளுக்குக் கடமைப்பட்டவன். அதே சமயத்தில் முந்திய கட்டுரையிலும், இப்போது நான் தொடங்கவிருக்கும் இக்கட்டுரையிலும் வெளியிட்டுள்ள கருத்துக்களுக்கு என்னைத் தவிர வேறு எவரும் பொறுப்பல்ல வென்பதையும் தெளிவாக்கி விடுகிறேன்.

மக்கள் சுயராஜ்யம்

I

தலைகீழ் சுயராஜ்ய அமைப்பு

இந்திய அரசியல் நிர்ணய சபை மக்கள் பெயரால்,

(அ) இந்தியாவை சுதந்திர ஜனநாயகக் குடியரசாக்குவதென்றும்,

(ஆ) குடிகள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நியாயமும், பேசவும் எழுதவும், தமக்கு இஷ்டமான மதத்தை ஏற்றுக் கடவுளை வழிபடவும் சுதந்திரமும், எல்லோருக்கும் சம அந்தஸ்தும் சம சந்தர்ப்பங்களும் அளிப்பதென்றும்,

(இ) தனி மனிதர் மதிப்பைப் பாதுகாத்தும், எல்லோரிடையிலும் சகோதர உணர்ச்சியை வளர்த்து நாட்டின் ஒற்றுமைக்கு ஆவன செய்வதாக வாக்களித்தும் தீர்மானித்தது.

இந்த நோக்கங்களையும் கொள்கைகளையும் சேர்த்துப் பார்க்கும் எவருக்கும் ஊக்கம் பிறவாதிராது; கவர்ச்சிகரமான ஜனநாயகம் இவற்றில் பிரதிபலிப்பது நன்கு தெரிய வரும். இந்தக் கற்பனைக்கு நிதரிசமான உருவளிக்கும் பொருட்டு அச்சபை இப்போது அமுலிலுள்ள ஆட்சி அமைப்பை உருவாக்கிற்று. பிறகு அவ்வப்போது அதில் செய்யப்பட்ட திருத்தங்களோடு சேர்ந்து அது நம் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்கும் கோட்டையாய் இருந்து வருகிறது.

தம் அண்டையிலுள்ள பல நாடுகள் பலவித மான சர்வாதிகார ஆட்சி முறைகளை ஏற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்த பிறகும் தாம் வேண்டு மென்றே ஜனநாயக முறையை ஏற்றிருப்பது குறித்து இந்நாட்டு மக்கள் நியாயமாய்ப் பெருமைப்படலாம். இதிலிருந்து நம் மக்களின் கலாச்சாரச் சிறப்பும் ஆன்மீக மேம்பாடும் வெளி யாகின்றன.

இவைகளையெல்லாம் சொல்லும்பொழுதே, கடந்த 10 ஆண்டுகளில் நமக்கேற்பட்டுள்ள ஜன நாயக அனுபவங்களை எண்ணிப் பார்த்தலும் அவசியமென்று தோன்றுகிறது. இவ்வாறு பார்க் கையில் நாம் ஒருபுறம் ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய கண்டங்களின் அனுபவங்களையும், மறு புறத்தில் மேனாடுகளில் உள்ள முதிர்ந்த ஜன நாயகங்களின் அனுபவங்களையும் நினைவில் கொள்ளுதல் நலமல்லவா ?

நம் ஆட்சி அமைப்பு 10 ஆண்டுகளாக அமு லில் இருந்து வருவதில் நமக்கு மிகவும் தெளிவாகத் தெரிய வந்திருக்கும் விஷயம் என்னவென்றால், வாக்குரிமை பெற்றுள்ள 20 கோடி மக்களுக்கும் நடந்து வரும் ஆட்சிக்கும் தொடர்பே இல்லாதிருப் பதுதான். அவர்கள் சென்ற இரு பொதுத்தேர்தல் களிலும் ஓட்டுச் சாவடிகளுக்குச் சென்று வாக் களித்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் தம் நாட்டு ஆட்சியுடன் இரு சந்தர்ப்பங்களில் இச் சிறு தொடர்பு இருந்ததைத் தவிர, அவர்களுக்கு வேறு எதுவும் செய்ய நேர்ந்ததில்லை. இப் போது நாம் கிராமாந்தரங்களுக்குப் போனால் அவ்விடத்திய மக்கள், ‘சுயராஜ்யம் என்னவோ

வந்ததே தவிர, அது தமக்கு வரவில்லை, அதனால் தமக்கு ஏதும் பயனில்லை' என்று சொல்லுவதைக் கேட்கிறோம். 'பழைய பிரிட்டிஷ் ஆட்சியில் போலவே, அப்போது இருந்த அதே ஆட்கள் தான் இப்போதும் தம்மீது ஆட்சி புரிகிறார்கள்; தம் ஊர் விவகாரங்களிலும் அவர்களை யாரும் எதுவும் கேட்பதில்லை; கிராமத்தின் வெட்டியான் தலையாரியையும் தாம் ஒன்றும் சொல்ல முடிவதில்லை; தாம் சொல்லுவதிருக்கட்டும், அவர்கள் தம்மை ராஜாக்களாக எண்ணிக்கொண்டு தோன்றியதைச் செய்கிறார்கள்; பழைய காலத்தில் போலவே லஞ்சப் பேய் தலைவிரித்தாடுகிறது' என்று குறைப்படுகிறார்கள். மொத்தத்தில் மக்களால் என்னவோ சுயராஜ்யம் வந்ததென்று சந்தோஷமாய் இருக்க முடியவில்லை என்ற உண்மையை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. மத்தியதர வகுப்பின் மேல் தளத்திலுள்ள படித்த ஒரு சிலரே—அவர்களுள்ளும் அரசியல் வேலைகளில் ஈடுபட்டிருந்தவர்களே இப்போது நம் ஜனநாயக ஆட்சியிலும் கலந்துகொண்டு வருகிறார்கள்.

நிலைமை இவ்வாறிருப்பதால் நம் ஜனநாயகம் நல்ல அஸ்திவாரமில்லாததாயிருக்கிறது. அதை தலைகீழாய் நிற்கும் கோபுரத்தோடு உவமிக்கலாம். இதனால் நாம் இப்போது, அந்த கோபுரத்தைப் புரட்டி அகலமான பக்கத்தை கீழேயும், குறுகிய பக்கத்தை மேலுமாகத் தூக்கி, நிறுத்த வேண்டும். வயது வந்த ஒவ்வொரு இந்தியனுக்கும் ஓட்டுரிமை இருப்பதிலிருந்தே இந்த கோபுரம் முறைப்படி சரியாய் அமைந்திருப்பதாய்ச் சொல்லிவிட முடியாது. கோடிக்கணக்கான தனி

ஓட்டர்கள், மணல் முட்டுக்கள் போன்றவர்களே. மணலின் மீது எவரும் கட்டிடம் எழுப்பமாட்டார் கள். இந்த மணலை மண்ணேடு கலந்து கற் களாக்கியோ, அல்லது சிமிண்டில் சேர்த்து உலர்த் தியோ ஆகவேண்டும். பிறகு அவற்றைக்கொண்டு அமைக்கப்படும் அஸ்திவாரம் மேலே எழுப்பப் படும் கட்டிடத்தைத் தாங்கிக் கொண்டு நிற்கும். ஆகையால் நம் ஜனநாயகம் நீடித்திருக்க வேண்டு மாளுல் அது உறுதியுள்ளதாய் இருத்தல் வேண் டும்; அது உறுதியாயிருப்பதற்கு அதன் அஸ்தி வாரம் வலுவுள்ளதாகவும், மேலேயுள்ள கட்டிடம் அடி பருத்தும் மேலே போகப் போகச் சிறுத்தும் இருக்க வேண்டும். அஸ்திவாரம் மட்டும் வலுவா யிருந்துவிட்டால் எவர் வந்து எவ்வளவு அசைத்தா லும் அது ஆட்டம் கொடுக்காது, விழாது. நம் நாட் டில் பழைய காலத்திய பாழடைந்த கோயில்கள்-அரண்மனைகள்-மாளிகைகளுக்குக் குறைவில்லை. ஒரு கட்டிடம் விழுகிறதென்ருல் எப்படி விழுகிறது என்பது இந்தப் புராதனப் பாழ்களைப் போய்ப் பார்த்தால் தெரியவரும். எப்போதும் முதலில் விழுவது மேல் மாடமாகத்தானிருக்கும்; பிறகு ஒவ்வொன்ருய் கீழேயுள்ளவை சரியும். வீடோ மாளிகையோ மேல்தளம் உட்கார்ந்த பிறகு சுவர்கள் சாயும். இவ்வாறு எல்லாம் விழுந்த பிறகும் அஸ்திவாரம் மட்டும் முதலில் போட்டபடி பல்லாயிரமாண்டுகளுக்கு இருந்துகொண்டேயிருக் கும். ஆகையால் பிரமாண்டமான கட்டிட மாயினும் நிலைத்து நிற்க வேண்டுமாளுல், அதன் அஸ்திவாரமும் தாய்ச் சுவர்களும் நல்ல உறுதியா யிருத்தல் அவசியம்.

ஆசியாவையும் ஆப்பிரிக்காவையும் சேர்ந்த சில நாடுகளில் மேல் நாடுகளிலுள்ள ஜனநாயத்தின் வெளி அமைப்பு அப்படியே ஏற்கப் பட்டிருக்கிறது. அதாவது, அங்கெல்லாம் பொதுவாகப் பார்க்கையில் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமையும் ஒன்றையொன்று எதிர்க்கும் கட்சிகளும் இருக்கின்றன; தேர்ந்தெடுத்த அங்கத்தினரைக் கொண்ட பார்லிமெண்டும், அதற்கு ஜவாப்தாரியான அரசாங்கமும் இருக்கின்றன. அதாவது, இந்தியாவில் போல கீழே ஒருவருக்கொருவர் தொடர்பற்ற ஓட்டர்கள் மணல் முட்டுக்களைப் போலிருக்க, அந்த மணல் அஸ்திவாரத்தின்மீது வானளாவிய ஆட்சிக் கட்டிடம் எழுப்பப்பட்டிருக்கிறது. இந்நிலையில் தம் நாட்டில் நடக்கும் ஆட்சிக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்று மக்கள் நினைப்பது இயல்பே. அவர்களுக்கு ஓட்டுரிமை இருந்தபோதிலும் அடி சிறுத்து மேலே பருத்துள்ள தலைகீழ்க் கோபுரம் போன்ற இந்த ஜனநாயகம் சிறு காற்றடித்தாலும் கீழே சாய்ந்துவிடவும், மணல் குவியலைப் போன்ற கோடிக்கணக்கான மக்கள் பரிகாரம் எதுவும் செய்யமாட்டாது, கையாலாகாதவர் போல் பார்த்துக் கொண்டுதான் நிற்பார்கள். இவ்வாறு வீழ்ந்த ஜனநாயகம் திறமையில்லாததாயும், அதன் நிர்வாகிகள் லஞ்சம் வாங்குகிறவராயுமிருந்து, உணவுப் பஞ்சம், வேலையில்லாமை போன்ற பிரச்னைகளுக்கு அவர்களால் பரிகாரம் தேட முடியாமலுமிருந்தால், முன்பு ஓட்டளித்த மக்களே இப்போது அரசாங்கம் கவிழ்ந்தது குறித்து மகிழவும் செய்வார்கள். தத்துவ ரீதியாக

ஜனநாயகத்திற்குள்ள சிறப்புக்களுக்காக மக்களுக்கு அதில் மோகமெதுவும் ஏற்படுவதில்லை. ஜனநாயகத்தினால் தமக்கு விளையும் நன்மைகளும், அதனால் வரக்கூடிய லாப நஷ்டங்களும், அதில் தாம் நேரிடையாகக் கொள்ளும் பங்குமே எந்த நாட்டிலும் மக்களுக்கு ஜனநாயக ஆட்சி முறையிலும் ஸ்தாபனங்களிலும் கவர்ச்சியையுண்டாக்குகின்றன.

ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் இருந்த ஜனநாயகங்கள் மட்டுமே தகர்ந்தன என்பதில்லை; மேனாடுகள் பலவற்றிலும் அவை கவிழ்ந்திருக்கின்றன. அவற்றைப் பார்த்தும் நாம் பாடம் கற்றுக் கொள்ளவில்லையென்றால் நாம் அறிவிலிகள் என்றே கருதப்படுவோம். நம் ஜனநாயகத்திற்கு இப்போது ஏதோ ஆபத்து வந்திருக்கிறது, இது கவிழப் போகிறது என்று சொல்லுவதற்கில்லையாயினும், இதுவரை உலகில் பல ஜனநாயகங்கள் கவிழ்ந்ததற்கு எந்த நோய்கள் காரணமோ அவையே இதையும் பற்றிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் மறக்கக்கூடாது. இப்போது நிர்வாகத்திலிருக்கும் ஒரு சில பெருந்தலைவர்களின் காலம் ஆகிவிட்டால் இந்த நோய்களைத் தீர்க்க முடியாமற் போய்விடவும், நம் ஜனநாயகத்தின் ஆயுளே முடிந்து போகலாம்.

முதிர்ந்து வளர்ந்த மேல்நாட்டு ஜனநாயகங்கள் நம்முடையதைப் போல் அடிசிறுத்தும் மேலே பருத்துமிருக்கவில்லை; அவற்றைத் தாங்கிப் பிடிப்பதற்கு பலவகை முட்டுக்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆயினும் நிர்வாகப் பொறுப்பும், முக்கியமான தீர்மானங்கள் செய்து நிறை

வேற்றுவதும் செல்வாக்கும் அந்தஸ்தும் வாய்ந்த ஒரு சிலரிடமே உள்ளன. ஸ்விட்ஜர்லாந்திலும், சிறிது குறைவாக நார்வே-ஸ்வீடனிலும் தவிர மற்ற மேனுடுகள் அனைத்திலும் இருந்துவருவது மக்கள் சம்மதத்தோடு ஒரு சிலர் நடத்தும் ஆட்சியே. விஞ்ஞானமும் கைத்தொழில் முறைகளும் வளர்ந்தும், பொருளாதார ஏற்பாடுகள் சிக்கலாகியும் விட்டமையால் அரசாங்க நிர்வாகம் வரவர மிகவும் சிறிய தொகையினரின் தொழிலாக ஆகிவருகிறது. இதே போக்கு மேலும் நீடித்து, பொருளாதார அரசியல் அதிகாரங்கள் ஒரு சிலர் கைக்குள் அடங்கி விடுமாகுல்-அவர்கள் உத்தியோகப்பற்றற்றவராயினும் அரசாங்க ஊழியராயினும்-நடப்பது பெயரளவுக்குள்ள ஜனநாயகமாயிருக்குமே தவிர உண்மையானதாயிராது.

மேலே நாட்டு ஜனநாயகங்கள் பற்றி நமக்கு அக்கறையில்லை; அவற்றில் எழும் பிரச்னைகளை அவர்கள் எப்படியோ தீர்த்துக் கொள்ளட்டும். ஆனல் மக்கள் சம்மதத்துடன் நடப்பதே ஜனநாயகம், அதில் மக்களுக்கு அமைதியாக அரசாங்கத்தை மாற்றிக் கொள்ள இடமுண்டு என்று சொல்லப் படுகிறதே, இந்த வரைமுறை மட்டும் இருந்தால் நமக்குப் போதாது. நாம் மேனுட்டாரின் அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக்கொண்டு இன்னும் திருந்திய, திருப்திகரமான ஜனநாயகத்தை அமைத்து வளர்க்க வேண்டும். எனவே நாம் எடுக்க வேண்டிய அடுத்த நடவடிக்கை, மக்கள் சம்மதத்தோடு நடக்கும் ஜனநாயகத்தை விடச் சிறந்ததாய், **மக்கள் நேரிடையாகக் கலந்து கொண்டு நடத்துவதான ஆட்சி முறையை அமைத்தலே.**

அரசாங்கம் தில்லியிலிருந்தோ, இராச்சியங்களின் ஒரு சில தலைநகரங்களிலிருந்தோ மட்டும் நடத்தப்படுவதானால் கோடிக்கணக்கான வாக்காளர் அதில் கலந்து கொள்ளுதல் சாத்தியமல்ல என்பது சொல்லாமலே விளங்கும். மக்கள் அனைவரும் நிர்வாகத்தில் கலந்து கொள்ளுவதற்கு அது கூடியவரையில் மக்கள் அருகே யிருப்பதாயிருக்க வேண்டும். இதற்கு நம் பொருளாதார ஏற்பாடுகளையும் நிர்வாக முறையையும் முழுதும் பரவல் முறையில் மாற்றியமைத்தாக வேண்டும்.

மேனாடுகளில் ஸ்தல சுய ஆட்சி மிகவும் நன்றாக நடந்து வருகிறது. அதே வகையில் இங்கும் நடத்துதல் நல்லதாயினும் நாம் கருதும் மக்கள் நேரிடையாகக் கலந்து கொண்டு நடத்தும் ஜனநாயக ஆட்சிக்கு இது மட்டுமிருந்தால் போதாது. மேனாடுகளில் ஸ்தல ஸ்தாபனங்கள் கணிசமான அதிகாரங்கள் பெற்றிருப்பினும், மத்திய அரசாங்கம் மிகவும் சக்தி வாய்ந்ததாயிருக்கும்; அதாவது, நாட்டின் நலனுக்காகும் முக்கியமான, பெரிய தீர்மானங்களெல்லாம் மத்திய அரசாங்கத்தினாலேயே செய்யப்படும். நான் கூறும் ஜனநாயகத்தில் இவ்வாறு நடக்கக் கூடாது என்பது என் கருத்து. நான் கருதுவது காந்தியடிகள் அடிக்கடி வற்புறுத்தி வந்ததொன்று. அதாவது, அரசாங்கத்தின் அடிப்படியிலிருந்து மேலே போகப்போக ஒவ்வொரு மேல் படிக்கும் உள்ள அதிகாரங்களும் வேலைகளும் குறைந்து கொண்டே போக வேண்டும். தலைகீழ்க் கோபுரமென்று தற்கால ஜனநாயகத்தை வர்ணித்தேனே,

அதன் பரந்த, பளுவான மேற்பகுதிகளை வெட்டிச் செதுக்கிக் கீழே கொணர்ந்து சேர்த்து, அடி அகல மாயும் மேலே போகப்போகக் குறுகியும் உள்ள சிறந்த கோபுரமாக அதை ஆக்க வேண்டும். இம்மாதிரியான ஏற்பாட்டில் ஒவ்வொரு படியிலும் உள்ள மக்களுக்கு தம் எல்லாக் காரியங்களையும் தாமே நிருவகித்துக் கொள்ள முழு வாய்ப்புக் கிடைக்கும். இத்தகைய ஜனநாயக ஏற்பாட்டில் மக்களுக்கு தம் ஆட்சியென்ற உடைமையுணர்ச்சி யும் சுய ஆட்சியின் இன்பமும் ஏற்படும்.

இப்போது எந்த சர்வாதிகாரியும் ஏற்கனவே யுள்ள, மேனாட்டு முறையில் அமைந்த ஜனநாயகத் தைத் தகர்த்து விட்டு சர்வாதிகாரம் தொடங் கும் போதெல்லாம் கிராமத்திலிருந்து தொடங்கி படிப்படியாய் எழுந்தமைந்த உண்மை மக்கள் ஆட்சியையே தாம் விரும்புவதாகவும், அதற் காகவே தாம் அதிகாரத்திற்கு வந்திருப்பதாகவும் சொல்லுவது வழக்கமாயிருப்பதைப் பார்க்க ஆச் சரியமாயிருக்கிறது. இவ்வாறு வெகு சமீபத்தில் செய்தவன் நேபாள மன்னனான மகேந்திரன். இவர்கள் இவ்வாறு தமக்கு அதிகாரத்தில் ஆசையே இல்லாததுபோல் பேசுவது சில சமயங் களில் உண்மையாயிருப்பினும், பெரும்பாலும் இது கேட்போரை ஏமாற்றும் தந்திரமாகவே உள்ளது. அது எவ்வாறாயினும் இந்த சர்வாதிகாரிகள் எல்லாருமே தாமும் ஜனநாயக பக்தர்களே என்று சத்தியம் செய்வதற்குக் காரணம்தான் என்ன? காரணத்திற்கு நாம் வெகுதூரம் போய்த் தேட வேண்டியதில்லை. 'மக்கள் ஜனநாயகம்' என்பதெல்லாம் வெறும் ஏமாற்று வித்தையே, அது இந்த

சர்வாதிகாரிகளுக்கு ஒரு வசதியான யுக்தியாய் உதவுகிறது என்பதல்ல. மேனுட்டு முறையில் அமைந்த ஜனநாயகம் மேலே பருத்து பளுவாயும், அடியில் வலுவில்லாமலும் இருந்து, உள்ளே முட்டுக்களும் கொடுக்கப்படாதிருக்கையில் வெகு விரைவிலும் சுலபமாகவும் சரிந்து போகிறது. 'அடிப்படை ஜனநாயகம்' (Basic Democracy) என்றே சர்வாதிகாரிகள் பேசுவதற்குக் காரணம், அவ்வாறு சொன்னுல்தான்—அதில் அவர்களுக்கு பெரும் பங்கிருக்க வேண்டுமாகையால்—மக்கள் சுலபமாய்ப் புரிந்துகொள்வார்கள் என்பது அவர்களுக்குத் தெரிகிறது. உண்மையாகவே ஜனநாயக முறையில் நம்பிக்கையுடன் இவ்வாறு பேசும் சர்வாதிகாரிகள் தாம் பேசும் புதிய ஜனநாயக ஆட்சியை நிறுவுவதற்கு சிரத்தையாக முயலுவார்களென்று எதிர் பார்ப்போம். ஐக்கிய அராபிக் குடியரசிலிருந்து நேபாளம் வரை இப்போது தலையெடுத்துள்ள சர்வாதிகாரிகள் தம் வாக்கை நிறைவேற்றுவார்களா, தாம் பற்றிக் கொண்டுள்ள அதிகாரத்தை மக்களுக்கும், அவர்களது நிறுவனங்களுக்கும் வழங்கி விடுவார்களா என்பது இனிமேல்தான் தெரியவேண்டும். ஐக்கிய அராபிக் குடியரசில் 'தேசீய ஐக்கியம்' (National Union) என்ற நிறுவனமும், பாகிஸ்தானில் 'அடிப்படை ஜனநாயகம்' (Basic Democracy) என்ற அமைப்புக்களும் ஏற்பாடாகியிருப்பது சொன்னதை நிறைவேற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளாயிருந்தாலும்கூட, இந்த நாடுகளெல்லாமே உண்மை ஜனநாயகங்கள் ஆவதற்கு இன்னும் எவ்வளவோ காலம் பிடிக்கும். ஆனுல் 'ஜனநாயகம் ஒழிந்தது!' என்றும், 'ஜன

நாயகம் நீடூழி வாழ்க!' என்றும் ஏககாலத்தில் கோஷங்கள் எழுப்பப்படுவதை தற்காலத்திய ஒரு விசித்திரமென்றே சொல்லவேண்டியிருக்கிறது.

அரசியல் அதிகாரங்களையும் பொருளாதார அமைப்புக்களையும் பிரித்து அரசாங்கத்தின் கீழ்ப் படிகளுக்குக் கொடுத்து வலுப்படுத்துவதனால் நாட்டின் தென்பு குறையுமோ, மத்திய அரசாங் கத்தில் இருக்க வேண்டிய ஒற்றுமை பாதிக்கப் படுமோ என்று எண்ணுதல் இயல்பு. நாட்டில் ஏற்கனவே பிளவுச் சக்திகள் பல இருப்பதும், ஊர்-மாகாண அபிமானங்களும் மொழிப் பற்றுக் களும் நிலவுவதும் இவ்வாறு சந்தேகப்படுவதற்கு இடமளிக்கின்றன. ஆனால் இவ்விஷயத்தை நுணுக் கமாக ஆராய்ந்தோமாயின் நாம் சொல்லும் ஏற்பாட்டினால் நாடு நல்ல வலுப் பெறும் என்ப தும், நாட்டில் வாழும் பல இன மக்களும் தம் விவ காரங்களை தாமே கவனித்துக் கொள்ளவும், தம் சிறப்பியல்புகளை வளர்க்கவும் பாதுகாக்கவும் வசதி பெறுகையில் அதை அவர்கள் மகிழ்ச்சியோடு வர வேற்கவே செய்வார்கள் என்பதும் தெரியவரும். ஏராளமான அதிகாரங்களையும் வேலைகளையும் தம் கையில் வைத்துக்கொண்டு சர்வ வல்லமையுள் ளது போல் காணும் மத்திய அரசாங்கம் பார்வைக் குத் தான் ஆற்றலுள்ளதாயிருக்கும். ஆனால் உள்ளே பார்த்தால் அதற்கு எப்போதும் தொந்தர வுகளும் தொல்லைகளும் இருந்து கொண்டேயிருக் குமாகையால், அதற்கு எந்த சமயத்திலும் சுக்கு நூருய்த் தகர்ந்து விழுதலென்ற ஆபத்துண்டு. மேலும், இம்மாதிரியான வலுவுள்ள மத்திய அர சாங்கம் போகப் போக தன் ஜனநாயகக் கொள்கை

களிலிருந்து விலகவும் சர்வாதிகாரமாக மாறவுமே செய்யும். இந்தியாவிலேயே வலுவுள்ள மத்திய அரசாங்கம் இருக்கவேண்டும், இராச்சியங்களெல்லாம் தில்லியின் ஏவலின்படி நடக்கவேண்டும் என்று சொல்லுகிறவரெல்லாம் 'பாசிஸ்ட்' (சர்வாதிகார) மோகங் கொண்டவர்களாய் இருப்பது காரணமில்லாமலல்ல.

அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பிரித்துத் தந்துவிட வேண்டும், மத்திய அரசாங்கம் அவசியமான பொறுப்புக்களை மட்டுமே வைத்துக்கொள்ள வேண்டும் என்பதனால் மத்திய அரசாங்கம் வலுவற்றுப் போகும் என்பதல்ல. வலுவோ, வலுவின்மையோ அதிகாரம் வகிப்போரின் ஆற்றலையே பொறுத்திருக்கிறது. அடியிலிருந்து உச்சிவரையில் எல்லாப் படிகளிலுமே தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் தம்மால் இயன்றவற்றையே செய்வார்கள்; ஒவ்வொரு படியிலும் அதிகாரம் வகிப்போர் சில காரியங்களைத் தம்மால் செய்ய முடியாததை உணருகையில் அதே படியிலுள்ள பிறருடன் சேர்ந்து கூட்டு முயற்சியினால் செய்ய முடியுமாவென்று பார்ப்பார்கள். இந்தக் காலத்தில் எத்தனையோ நாடுகள் கூட தம் சக்திக்கு மீறிய வேலைகள் வந்து சமாளிக்க முடியாமல் திணறுவதால், பல நாடுகள் சேர்ந்து நடத்தும் கூட்டு ஆட்சி முறையை இப்போது பலர் ஆதரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்பது கவனிக்கத் தக்கது. இந்த ஏற்பாட்டில் மத்திய அரசாங்கம் வலுவுள்ளதாய் இருப்பதும், அதற்கு நல்ல ஆற்றல் இருப்பதும் மிகவும் அவசியமாகிறது. அவ்வாறு இருந்தால் கீழ்ப்படிகளிலுள்ளவை

யெல்லாம் தம்மால் முடியாதவைகளை திறமையாக வும் விரைவிலும் செய்து முடிக்க வேண்டி, தாமே மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரங்களையும் அவற்றைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை யும் வழங்கும். தற்காப்பு, வெளிநாட்டுறவு, நாட்டுக்குள்ளேயே பல்வேறு ராச்சியங்களிடையே சம்பந்தங்கள், நாணயச் செலாவணி, ஏற்றுமதி-இறக்குமதியை முறைப்படுத்துதல், தேசீய ஒற்றுமையைப் பாதுகாத்தல் ஆகிய காரியங்களை மத்திய அரசாங்கம் ஒன்றினாலேயே நிர்வகிக்க முடியும். இவற்றிற்கான அதிகாரம் பெற்றுள்ள ஒரு மத்திய அரசாங்கத்தை—இன்னும் பல பொறுப்புகள் அதனிடம் இல்லாமையால்—அதிகாரமில்லாதது, பலமில்லாதது என்று சொல்ல முடியாது. உண்மையில் மேற்கூறிய குறிப்பிட்ட அதிகாரங்களைச் செலுத்தும் அரசாங்கம் நல்ல வலுவும் ஆற்றலும் சக்தியுமுள்ளதாகவே இருக்கும். இதற்கு மாருக, அதிகப் பளுவுள்ள எல்லா வேலைகளையும் தன் தலையில் எடுத்துப் போட்டுக் கொண்டும், ஒரு பைசா விடாமல் வருமானத்தையும் செலவையும் தோண்டித் துராவிக் கொண்டும் இருக்கும் மத்திய அரசாங்கம் அதிகாரமும் ஆற்றலும் ஏராளமாய்ப் பெற்றிருப்பதாய்க் காணினும், உண்மையில் தென்பும் திறமையுமற்றதாய், ஆமை வேகத்தில் நடப்பதாகவே இருக்கும்.

ஒரு நாட்டின் ஒற்றுமையும் பலமும் அதன் மத்திய அரசாங்கம் நேரிடையாக நிர்வகிக்கும் இலாகாக்களைப் பொறுத்திரா; மக்களின் மனப்பூர்வமான ஒற்றுமையையும், பொது அனுபவங்களையும், ஆசைகளையும், பொதுவான நாட்டுப்

பற்றையும், மக்களின் பரஸ்பர நல்லெண்ணத்தையும், தாராள மனப்பான்மையையும்—இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அதன் தலைவர்களின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மைக்கு வேண்டிய புத்தி சாலித்தனத்தையுமே பொறுத்திருக்கும்.

II

பஞ்சாயத்து ஆட்சி

சுயராஜ்யம் என்ற பயிர்—அது எந்த இனத்தைச் சேர்ந்ததாயினும் சர்வாதிகாரச் சூழ்நிலையில் வளர்ந்து தழைக்குமா வென்ற சந்தேகம் எழலாம். ஆனால் அதிர்ஷ்டவசமாக நம் நாட்டைப் பற்றிய வரையில் நம் ஜனநாயகத்தைப் புதுப்பிக்கவும், ஆழ்ந்த அஸ்திவாரத்துடன் பரந்த அடிப்படையில் அமைக்கவும் முழு வசதி யில்லா விட்டாலும், போதிய வசதியும் வாய்ப்பும் நமக்கு இருக்கின்றன. இந்த சௌகரியங்களை, சாதக மான நிலைமையைப் பயன்படுத்தி வேலை செய்து கொண்டு போனால் நிலைமை மீறிப்போகுமுன் நம் ஜனநாயகத்தை திருப்தி யளிப்பதாகவும், நிலைத்ததாகவும் செய்துவிடலாமென்றே எனக்குத் தோன்றுகிறது.

நம் நாட்டில் மக்கள் கலந்துகொண்டு நடத்தப்பெறும் ஜனநாயகம் முதலில் 'பரவல் முறை ஜனநாயக'மென்று அழைக்கப்பட்டு, இப்போது 'பஞ்சாயத்து ஆட்சி' எனப்படுவதற்கு அஸ்திவாரம் போட ஆரம்பமாகி யிருப்பது மிகவும்

திருப்தி யளிக்கும் விஷயமாகும். இந்தச் சோதனை யின் ஆரம்பகர்த்தா திரு. பலவந்தராய் மேத்தா ஆவார். அது மத்திய அரசாங்கத்தின் சமூக நலத் திட்ட அமைச்சர் திரு. எஸ். கே. டே அவர் களின் திறமை, நெடுநோக்கு ஆகியவை, பிரதம மந்திரியின் உறுதியான ஆதரவு பெற்று, இடை யூறுகள் எவ்வளவோ குறுக்கிட்டும் சட்டை செய் யாது முன்னேறியிருக்கிறது. காங்கிரஸ் கட்சி பஞ்சாயத்து ஆட்சியென்ற லட்சியத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. பல இராச்சியங்களில் பஞ்சா யத்து ஆட்சி ஏற்கெனவே ஆரம்பமாகிவிட்டது; அடுத்த சிலவாண்டுகளுள் எஞ்சிய இராச்சியங்களி லும் ஏற்பட்டு விடுமென்று எதிர்ப்பார்க்கப்படு கிறது.

கடந்த சில மாதங்களில் பஞ்சாயத்து ஆட்சி பற்றி எவ்வளவோ எழுதப்பட்டிருக்கிறது. ஆகை யால் நான் அது பற்றி அதிகம் சொல்லத் தேவை யில்லையாயினும் சில விஷயங்களைக் குறிப்பிடுதல் அவசியமென்று நினைக்கிறேன். முதலில் நாம் ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்ளவேண்டும். பஞ்சாயத்து ஆட்சி அமைக்கும் இந்த எண்ணம் தோன்றியதற்கே நம் ஜனநாயகத்தின் அஸ்தி வாரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற அரசியல் நோக்கமோ, நான் மக்கள் கலந்து நடத்தும் ஜன நாயகம் என்கிறேனே அதற்கு அஸ்திவாரமிடும் எண்ணமோ அல்லாது, அரசாங்கம் தொடங்கி யுள்ள அபிவிருத்தி திட்டங்களில் மக்களின் முழு ஒத்துழைப்பைப்பெறும் ஆவலே காரண மாயிருந்திருக்கிறது. இந்தக் குறுகிய நோக்கம் காரணமாக இதன் முழுப்பொருளை, சாதக

பாதகங்களை பொது மக்கள் புரிந்து கொள்வது இருக்கட்டும், அரசியலிலேயே மூழ்கியிருப்பவர்களும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் ஆரம்பமான இந்த இயக்கம் விசை கொடுத்துக் கிளப்பிவிட்ட யந்திரம்போல் தானே முன்னேறிக் கொண்டும், வளர்ந்து பெருகிக் கொண்டும் இருப்பதைப் பார்க்கிறோம். இந்தச் சீர்திருத்தத்திற்கு மக்களின் முழு ஆதரவு கிட்டும்படிச் செய்வதும், இது அரசாங்கமே கிராம வட்டாரங்களில் நடத்திக்கொண்டு போகும் சிறு மாறுதலல்ல தம்மைப் பெரிதும் பாதிக்கக்கூடிய பெரிய அரசியல் புரட்சி, இதன் நோக்கமும்—சரியாக நடந்தால்—இதன் விளைவும் தம் கைக்கு சுயராஜ்யத்தைக் கொண்டு வரும் என்பதை உணர்த்துவதும் அவசியம். இவ்வாறு மக்களுக்கு உற்சாகம் உண்டாகுமாறு செய்ய அபிவிருத்தி இலாகாவின் அதிகாரிகளினால் ஆகாது. இதைச் செய்ய வேண்டியவர்கள்—அவர்கள் கட்சியும் கொள்கையும் எவ்வாறு இருப்பினும்—நாட்டின் செல்வாக்குள்ள தலைவர்களும், சமூக ஊழியர்களும், சிறந்த அறிவும் உயர்ந்த நடத்தையும் உள்ள பெரியாருமே.

பஞ்சாயத்து ஆட்சி உண்மையான, மக்கள் பங்கு கொள்ளும் ஜனநாயகத்தின் அடிப்படையில் அமைவதற்குமுன் சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

முதலாவதாக, இந்தப் பரிசோதனை வெற்றி பெற வேண்டுமென்றால் மக்களுக்கு இது பற்றிய எல்லா விஷயங்களையும் நன்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் மனதில் பதித்தல் மிகவும் அவசியம். இதைச் செய்ய வேண்டியவர்கள் கட்சிச் சார்பும்

சுயநலமுமில்லாமல் சமூக சேவையிலோ கிராம முன்னேற்றப் பணியிலோ ஈடுபட்டிருப்பவர்களே. அரசியல் கட்சிகளும் தம் கட்சி அபிமானத்தை ஒருபுறம் கட்டிவைக்கச் சம்மதித்தால் இதற்கு எவ்வளவோ உதவலாம். அரசியல் கட்சிகள் இதற்கு உதவுவதற்குள்ள சிறந்த வழி, இதற்கென பொது ஸ்தாபனம் அல்லது குழுவொன்றை உருவாக்குதலேயாகும். அரசாங்க அதிகாரிகளும், அரசாங்கத்தின் பார்வையில் பணியாற்றும் ஸ்தாபனங்களும் கூட இதற்கு பல வகையில் உதவலாம். பள்ளிகளும் புத்தக-வாசகசாலைகளும் கூட்டுறவுச் சங்கங்களும் இதில் முக்கியப் பங்கு கொள்ளலாம். கட்சிச் சார்பற்றதும், விஷயங்களை எடுத்துச் சொல்லுதலே வேலையாயுள்ளதுமாய், வாக்காளர்களாகச் சேர்ந்து 'அகில இந்திய வாக்காளர் சங்கம்' என்ற பெயரில் சங்கமொன்று அமைத்துக் கொண்டு வாக்காளர்களுக்கு விஷயங்களை எடுத்து விளக்குதலும் கவனிக்கத் தக்கதே. இவையல்லாமல் மத்திய சமூக நல இலாகாவும் அகில இந்திய பஞ்சாயத்து பரிஷதும், மற்ற அகில இந்திய நிறுவனங்களும், அகில பாரத சர்வசேவா சங்கமும், கிராம ஊழியத்திற்காகவுள்ள பிற ஸ்தாபனங்களுமாகச் சேர்ந்து கூட்டு நிறுவனமொன்று அமைத்துக்கொள்ளவும் செய்யலாம். அது நூல்களும் பிரசுரங்களும் வெளியிட்டும், சர்வேக்கள் நடத்தியும், புதிய பழைய பிரச்னைகளை ஆராய்ந்து முடிவுகளை வெளியிட்டும் வரலாம்.

இரண்டாவதாக, பஞ்சாயத்து ஆட்சி வெற்றிபெற வேண்டுமானால், கட்டுப்பாடுள்ள

அரசியல் கட்சிகள் அதில் தலையிடாமலும், அதைத் தம் கைக்கருவியாகக் கொண்டு அதிகார பீடத்திற்கு வருவதற்குப் பயன்படுத்தப் பார்க்காமலும் இருக்க வேண்டும் என்பதை எவ்வளவு அழுத்தமாய்ச் சொன்னாலும் போதாது. மக்கள் விழிப்புற்று விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆரம்பித்து விட்டால் அவர்களை எவராலும் ஏமாற்ற முடியாது, அரசியல் கட்சிகளோ அதிகார ஆசையுள்ள அரசியல்வாதிகளோ அவர்களை இஷ்டம்போல் ஆட்டிவைக்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் இந்த ஆரம்ப காலத்தில் எந்த மக்களின் நலனில் அக்கறை கொண்டிருப்பதாகவும், உதவ விரும்புவதாகவும் அவர்கள் சொல்லுகிறார்களோ, அவர்களின் நலனைக் கருதி, அரசியல் கட்சிகள் தம் கட்சிகளின் சார்பில் எவரையும் நிறுத்துவதில்லை, தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்களை தம் கட்சியில் சேருமாறு வற்புறுத்தி அவர்கள்மூலம் இந்த அடிப்படை ஜனநாயக ஸ்தாபனங்களை தம் வசத்தில் வைத்துக்கொள்ளப் பார்ப்பதில்லை என்ற விரதம் பூணவேண்டும். இந்த நிறுவனங்கள் நன்கு வளர்ந்து சிறப்பாய் நடந்து வருவதற்கும், மக்கள் விஷயத்தை நன்கு தெரிந்துகொண்டு நிர்வாகத்தில் கலந்துகொள்ளுவதற்கும் கட்சிகளின் தலையீடு இல்லாமல் அவர்கள் நேரிடையாகவே இவற்றை நடத்திக்கொண்டு போகச் செய்தல் அவசியம். கட்சிகள் மக்களிடையே சென்று அவர்களுக்கு விஷயங்களை எடுத்து விளக்கலாம். இவ்வாறு விளக்கப்பெறும் கருத்துக்களும் கொள்கைகளும் ஒன்றுக்கொன்று நேர் மாறாய் இருந்தாலும் பாதகமில்லை. எல்லா அரசியல் கட்சிகளின் தலைவர்

களும் தம்மிடையே உண்மையான ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டு நிறைவேற்றிவந்தால் இந்த லட்சியம் நிறைவேறுவதில் சிரமமிராது.

மூன்ருவதாக, மக்கள் கைக்கு அதிகாரத்தை மாற்றுவதாகச் சொல்லப்படுவது வெறும் ஏமாற்று வித்தையாய் இராது உண்மையானதாயிருக்க வேண்டும். வெளிப் பார்வைக்கு பஞ்சாயத்து ஆட்சிபோன்ற ஒன்றை அமைத்துவிட்டு அதற்கு உயிரளியாது இருக்கக்கூடாது. அவ்வாறு செய்தால் அது ஆன்மாவில்லாத உடலாய், செத்தே பிறந்ததாய் ஆகிவிடும். இதைச் செய்ய உண்மையும் கற்பனைசக்தியும் மனோபலமும் மிகவும் தேவை. மக்களை நாம் நம்பவேண்டும். A, B, C, D என்று நான்கு எழுத்து கற்றுவிட்ட நாம் கிராம மக்களுக்கு அறிவு கிடையாதென்றும், ஆற்றலில்லையென்றும் எண்ணுவது வழக்கமாயிருப்பதால், உண்மையில் அதிகாரம் எதுவும் தராமல் அதிகாரத்தை மாற்றப்போவதாகப் பேசிக்கொண்டு போகலாம். ஒருவருக்கு பொறுப்பெதுவும் கொடாமலே, அவரால் பொறுப்பை நிர்வகிக்க முடியவில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதற்கு அர்த்தமில்லை. மக்களிடம் நம்பிக்கை இல்லாமையாலோ, கையிலுள்ள அதிகாரத்தைவிட மனமில்லாமையாலோ நாம் மக்களுக்கு அதிகாரம் தராமலே இருந்தால், அதன் விளைவு அவர்களுக்கு பொறுப்புணர்ச்சியே ஏற்படாமல் போவதும், அவர்கள் வீர தீரர்களும் அற்புதங்கள் விளைக்கும் அவதாரங்களும் வந்து தம் சிரமங்களைத் தீர்ப்பார்களென்று எதிர்பார்ப்பதுமாகத் தான் இருக்கும். மக்களுக்கு இம்மாதிரியான மனோநிலை ஏற்படும்

போதுதான் சர்வாதிகாரிகள் தோன்றுகிறார்கள். எனவே ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமானால் மக்களைப் பயிற்றலும், முழுப் பொறுப்பையும் ஏற்க அவர்களுக்கு வாய்ப்பளித்தலும் அவசியம்.

பஞ்சாயத்து ஆட்சித் திட்டத்தில் அதிகாரம் வகித்து ஆட்சி நடத்துவதற்கென மூன்று படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை முதலில் **கிராமப் பஞ்சாயத்து**, அதற்குமேல் **வட்டார(ப் பஞ்சாயத்து) சமிதி**, அதற்கும் மேலே **மாவட்ட (பஞ்சாயத்து) பரிஷத்** என்பவை. இவை ஒவ்வொன்றிலும் அந்தந்தப்படியில் உள்ள மக்களுக்கு தம்மால் இயன்றவை அனைத்தையும் தாமே செய்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சிமுறையிலோ ஜில்லா மாஜிஸ்டிரேட் அல்லது கலெக்டரே முக்கியமானவராயிருந்தார். இப்போதும் அவர் இருக்கத்தான் செய்கிறார்—அவர் அந்தஸ்தும் அதிகாரங்களும் அப்படியேதான் இருக்கின்றன. ஆனால் பஞ்சாயத்து ஆட்சியில் மக்கள் கைக்கு அதிகாரம் மாற்றப்பட்டிருப்பது உண்மையானால், போகப்போக இந்த ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் முக்கியத்துவம் குறைந்து இறுதியில் இல்லாமலே போகவேண்டும்; இருப்பதானாலும் இப்போது கவர்னர் மத்திய அரசாங்கத்திற்கு இராச்சியங்களில் பிரதிநிதியாய் இருப்பதைப் போல, இராச்சிய அரசாங்கத்திற்கு அவர் பிரதிநிதியாய் இருந்து வரவேண்டும். ஆனால் முதலில் பஞ்சாயத்து ஆட்சி அமுலுக்கு வந்த ராஜஸ்தானத்திலேயே இன்னும் இது நடந்தாகவில்லை. இதை எடுத்ததுமே செய்துவிட முடியாது, இதற்குச்சிறிது காலம் ஆகவேண்டும் என்பது சரிதான்.

ஆனல் இதுவே நம் லட்சியம் என்பதாவது ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை.

நான்காவதாக, ஒவ்வொரு படியிலுமுள்ள ஸ்தல நிர்வாகத்திற்கு போதிய, குறைந்தபட்ச வருவாய்களுக்கு ஏற்பாடு இருத்தல் மிகவும் அவசியம். வருவாய்க்கான வழிகளையெல்லாம் இராச்சிய அரசாங்கம் தன் கையிலேயே வைத்துக்கொண்டு, மக்களுக்கு அதிகாரத்தை மாற்றிவிட்டதாகச் சொன்னல் அந்த மாற்றம் பெயரளவினதாகத் தான் இருக்கும். பணப்பை யாரிடம் இருக்கிறதோ அவர்கள் சொல்தான் எடுபடும். ஆகையால் செலவுக்குப் பணமில்லாது வேலைகள் பலவற்றை செய்யச் சொன்னல் ஒன்றும் நடவாது. அதிகாரங்கள் பல மாற்றப்பட்டிருப்பினும் பண வருவாய்க்கு போதிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லையென்று நினைக்கிறேன். இது சம்பந்தமாக நான் சொல்லும் யோசனை, நிலவரி வகையில் ஆகும் வசூல் முழுவதையும்—அதில் பிரமாதமாக ஒன்றும் வந்துவிடாதாயினும்—எடுத்ததுமே கிராமப் பஞ்சாயத்துக்களிடமும் வட்டாரப் பஞ்சாயத்து சமிதிகளிடமும் கொடுத்துவிட வேண்டும்; இராச்சிய அரசாங்கம் நிலவரிமுழுவதும் தன்னைச் சேர்ந்ததென்று நினைப்பதையும், அதிலிருந்து ஒரு பகுதியை மட்டும் இவைகளுக்கு ஒதுக்குவதையும் நிறுத்த வேண்டும். அதிக நிலவரி வருமானமில்லாத கிராமங்களுக்கும் வட்டாரங்களுக்கும் உதவி, வருவாயைச் சமனுக்குவதற்காக பொது நிதி யொன்றை ஒதுக்கி வைத்துவிட்டு, எஞ்சிய நிலவரி முழுவதையும் பஞ்சாயத்துக்களிடமும் சமிதிகளிடமும் விட்டுவிடவேண்டும். இதுவன்றி

வேறு வருவாய்க்கான வழிகளைக் கண்டுபிடிக்கவும், அவற்றை பஞ்சாயத்து நிறுவனங்களிடம் விடவும் செய்தாலல்லது பஞ்சாயத்து ஆட்சி சுதந்திரமாகவும் சிறப்பாகவும் நடப்பதற்கு வழி இல்லை. இதற்கு விசேஷ அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்கு இராச்சிய அரசாங்கங் களும் மத்திய அரசாங்கமும் பஞ்சாயத்துக் களுக்கு பிரத்தியேகமாக உதவக்கூடாதென்பது அர்த்தமல்ல.

ஐந்தாவதாக, பஞ்சாயத்து நிர்வாகம் கூடிய விரைவில் தன் கீழ் வேலை பார்க்கும் சிவில் ஊழியர் அனைவர்மீதும் ஆதிக்கம் பெற்று, அவர்கள் செய்யும் வேலைகளைக் கண்காணிக்கவும், குறைகள் இருந்தால் கேட்கவும் அதிகாரம் பெற வேண்டும். உத்தியோகத்திற்கு ஆட்கள் திரட்டுவதையும் ஸ்தல அதிகாரிகள் அல்லது அவர்களால் நியமிக் கப் பெற்றவர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்கள் மேற்பார்வையிலும் ஆலோசனையைக் கேட்டும் செய்தல் நலம். அதே சமயத்தில் சிவில் ஊழியர் களுக்கு எப்போதும் நியாயம் கிடைக்கும், நீடித்து வேலையும் இருக்குமென்ற உறுதியளித் தலும், அவர்கள் வெளியார் தலையீடு எதுவுமின்றி தம் கடமையைச் செய்யுமாறு விடப்படுதலும் அவசியம்.

ஆருவதாக, மூன்று படிகள் அல்லது மாடங் களால் அமைந்த பஞ்சாயத்து ஆட்சிக்கு முதல் படியான கிராமப் பஞ்சாயத்தே அஸ்திவாரம் என்று சொல்லத் தேவையில்லை. பஞ்சாயத்து ஆட்சி என்ற கோபுரம், அதன் ஜனநாயகத் தன்மை உறுதியாய், அசைக்கமுடியாததாய் இருப்

பது கிராமப் பஞ்சாயத்துக்கள் ஜனநாயக முறையில் அமைந்திருப்பதையும், அதிலிருந்து அதற்கேற்படும் தென்பையும் உறுதியையுமே பொறுத்திருக்கிறது. நான் இங்கே மக்கள் பங்கு கொள்வதை உண்மை ஜனநாயகத்தின் அறிகுறியென்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சுய ஆட்சியின் எந்தப் படியிலேனும் மக்கள் முழுதும் பங்குகொள்ளுதல் சாத்தியமென்றால் அது கிராமப் படியில்தான்; கிராமத்தில் மட்டுமே நேரிடையான ஜனநாயகம் திருப்திகரமாய்ச் செயல்பட முடியும்.

ஆனால் கிராமப்படியிலும் கிராமப் பஞ்சாயத்தே அதிகாரம் பெற்றுள்ள ஸ்தாபனமாய் இருந்தது, பஞ்சாயத்து தேர்தல்களில் வாக்களிப்பதைத் தவிர கிராமக் காரியங்களின் நிர்வாகத்தில் மக்களுக்கு பங்கு எதுவுமே இல்லாவிட்டால், இந்த கிராம ஜனநாயகமும் சரியாய் நடப்பதாகாது; அதைக் கொண்டு நாம் திருப்திப்படுவதற்கு இல்லை; அப்போது பஞ்சாயத்து ஆட்சியென்ற ஏற்பாடு முழுதுமே அர்த்தமில்லாததாய்ப் போய் விடும். கிராமப் பஞ்சாயத்து தென்புடன் சிறப்பாய்ச் செயல்படுவதற்கு அதன் எல்லாக் காரியங்களிலும் கிராம மக்கள் அனைவரும் தொடர்ந்தும் உற்சாகமாகவும் புத்திசாலித்தனமாகவும் கலந்து கொள்ளுதலும் ஒத்துழைத்தலும் மிகவும் அவசியம்.

இந்தப் புதிய பஞ்சாயத்து ஆட்சி ஏற்படுவதற்கு முன்பும் கிராமங்களில் பஞ்சாயத்துக்கள் இருந்தன. ஆனால் அப்போது அவை கிராம ஜனநாயகத்திற்குப் பிரதிநிதியாயில்லாமல் மாகாண

அரசாங்கத்திற்கும், இன்னும் மோசமாக ஸ்தல அதிகாரிகளுக்கும் சொன்ன வேலையைச் செய்பவையாயிருந்தன. பஞ்சாயத்து ஆட்சியிலும் கிராமப் பஞ்சாயத்துக்கள் கிராம சமூகத்திலிருந்து தொடர்ந்து தென்பும் அதிகாரமும் போஷணையும் பெற்று வராவிட்டால் அவை முன்பு போல் இராச்சிய அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் தம் இஷ்டம்போல் அடக்கியாளவும் ஏவவும் உள்ள கருவிகளாய் ஆகிவிடும். இவ்வாறு அமைந்து நடக்கும் பஞ்சாயத்து ஆட்சி கீழேயிருந்து தொடங்கி அமைந்துள்ள ஜனநாயக ஏற்பாடாயில்லாது, மேலேயிருந்து நடத்தப்பெறும் அதிகார வர்க்க ஆட்சியின் விஸ்தரிப்பாகவே இருக்கும்.

ஆகவே நம் ஜனநாயகத்திற்கு நல்ல உறுதியான அஸ்திவாரம் ஏற்படுத்தவும், அதன் நடைமுறைகளில் மக்கள் தொடர்ந்தும் தீவிரமாகவும் கலந்து கொள்ளவும் வேண்டி, நாம் அதன் அடிப்படையான கிராமப் பஞ்சாயத்தினிடமும் கிராம மக்களிடமும் போய், ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள வயதுவந்த மக்கள் அனைவரையும் சேர்த்து சட்டபூர்வமான **கிராம சபையாக** அமைக்க வேண்டும். பஞ்சாயத்து இந்த கிராம சபையின் நிர்வாகக் கமிட்டியாயிருந்து செயலாற்றும்; கிராம சபை தேவையான சமயங்களில் குறிப்பிட்ட காரியங்களுக்கென வேறு கமிட்டிகளையும் குழுக்களையும் அமைக்க அதிகாரம் பெற்றிருக்கும்.

இப்போது இதைச் செய்ய முயற்சி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் மக்களின் திறமையையும் பகுத்தறிவையும் நம்பி அவர்களிடம் பொறுப்பை

விடுவதில் ஏனோ விசித்திரமான தயக்கம் காணப் படுகிறது. கிராம சபைகள் என்னவோ அமைக் கப்பட்ட போதிலும் அவை வேலை செய்யக் காணோம். பஞ்சாயத்துக்களும், சில சமயங்களில் அவைகளின் தலைவர்களுமே எல்லா அதிகாரங் களையும் வைத்துக் கொண்டு நடத்துவதால் மக்க ளிடையே இயல்பாகவே அசிரத்தையும் அலட்சிய புத்தியும் தோன்றியிருப்பதைக் காண்கிறோம். கிராமசபைகள் 3 மாதத்திற்கு ஒரு முறையோ இன்னும் குறைந்த இடைக்காலம் விட்டோ கூட வேண்டும். அப்போது வரவு-செலவு திட்டம் உள் ளிட்ட எல்லா முக்கியமான விஷயங்களும், பேசித் தீர்ப்பதற்கு மட்டுமல்லாமல், அங்கத்தினர் அபிப்பி ராயம் தெரிந்துகொள்ளவும், அவர்கள் ஆதரவும் ஒப்பமும் பெறவுமென சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் மக்களுக்கு தமக்குள்ள பொறுப்புக்களும், தாம் செய்யக் கூடியவை என்ன வென்பதும் தெரியவரும். அப்போதுதான் பஞ்சாயத்து அரசாங்க அதிகாரிகளின் கைப் பொம்மையாகவோ, கிராமத்தின் சில சுயநலமிகள் அல்லது சாதிகள் இஷ்டம்போல் ஆட்டி வைக் கக் கூடியதாகவோ இராது மக்களின் பொது வான விருப்பத்தை நிறைவேற்றும் சாதன மாய் இருக்கும். இவ்வாறு நடக்கையில் கிராம சபைகளேயன்றி கிராமப் பஞ்சாயத்துக்கள் இந்த நேர்த்தியான ஜனநாயக கோபுரத்திற்கு அடிப்படி யாய் இரா. அந்த அடிப்படி மிகவும் பரந்தும் உறுதியுள்ளதாயும் இருக்குமென்று சொல்லத் தேவையில்லை.

ஆகவே இந்திய ஜனநாயகம் உறுதியுள்ள

தாய் இருந்து வர எண்ணி, இந்திய மக்கள் தம் நிர்வாகத்தை தாமே நடத்திக் கொள்வதற்கு உதவ விரும்புகிறவர்களெல்லாம் ஒன்று சேரவும், மக்களிடையே இதற்குத் தேவையான சமூக உணர்ச்சியையும் செயல் திறனையும் நேர்மையையும் வளர்க்கவும் வேண்டும். நாட்டின் ஜனநாயகக் கட்சிகள் எல்லாவற்றிற்குமே அதிகாரம் பெறுவதற்காக நடக்கும் போட்டா போட்டியிலிருந்து ஓய்வு கிடைக்குமானால், இவ்வகையில் செய்வதற்கு மிகவும் உற்சாகமளிக்கும் வேலை ஏராளமாய் இருக்கிறது. அரசாங்கமோ மக்களோ பயிற்சியும் கல்வியும் அளிப்பதற்காக வகுக்கும் திட்டங்கள் எல்லாவற்றிற்கும் இதுவே முக்கிய நோக்கமாகவும் இருக்கவேண்டும்.

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு தம் நிர்வாகக் கமிட்டியின் அங்கத்தினர் சிலரை தாமே நியமிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தால்—இந்த நியமனம் தேவையானதாகவும் விரும்பத்தக்கதாகவும் இருக்கையிலும்—இவர்களை சம்பந்தப்பட்ட இனங்கள் அல்லது சமூகங்களோ அல்லது பஞ்சாயத்து முழுவதுமோ சேர்ந்து நியமிப்பதென்றோ—இதையே வேறுவகையில் செய்வதென்றோ இருக்குமாறு சட்டத்தைத் திருத்த வேண்டும். எந்த நிலையிலும் இவ்வாறு சில ஆட்களை தம் கையில் எப்போதும் வைத்துக் கொள்வதற்கு சட்டத்தில் இடமிருக்கவே கூடாது.

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு நடக்கும் தேர்தல்களில் போட்டா போட்டியே கூடாதென்பது என் திடமான எண்ணம். என் இக் கருத்தை சில வட்டாரங்கள் கடுமையாகக் கண்டிக்கின்

றன. இன்னும் சில முதலில் எதிர்த்தவை, இப்போது என் கருத்தை நெருங்கி வந்துகொண்டிருப்பதுபோல் காண்கிறது. என்னைப்பற்றிய வரையில், இவ்விஷயம் குறித்து நான் யோசித்ததிலிருந்தும், பலருடன் இதுபற்றிப் பேசியதிலிருந்தும் கிராமப் பஞ்சாயத்துக்கள் நடந்து வரும் விதத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டதிலிருந்தும், பஞ்சாயத்து ஆட்சி வெற்றி பெற வேண்டுமானால் அவைகளுக்கு நடக்கும் தேர்தல்களில் போட்டிக்கே இடமளிக்கக் கூடாதென்பதை உணருகிறேன். நம் கிராமங்களில் ஏற்கெனவே ஒற்றுமையே அரிதாயிருக்கிறது ; சாதிப் பிரிவினைகளும் வர்க்க-இனப் பிரிவுகளும் மலிந்துள்ளன. போதாததற்கு குடும்பச் சண்டைகள் வேறு உள்ளன. எந்தக் கிராமத்திலும் பொதுவான, ஒற்றுமையான அபிப்பிராயம், கருத்து என்பதே இல்லை. ஆனால் கிராமத்தில் நடத்த வேண்டியதாயுள்ள காரியங்களை கிராமம் முழுதும் ஏகோபித்துப் பாடுபட்டாலல்லது நடத்த முடியாது. கிராம சமூகங்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு முன் கிராம மக்களிடையே குடும்பத்தினுடையது போன்ற ஒற்றுமையுணர்ச்சியை உண்டாக்க வேண்டும். இந்நிலையில் கிராமங்களில் தேர்தல் போட்டிகளைப் புகுத்துதல் ஓர் ஓடும் சிக்கலான யந்திரத்தில் திருகாணியைக் கழற்றுவதற்குள்ள குறடை எறிவது போன்றே இருக்கும். தாம் சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டுமானால் எல்லோரும் சேர்ந்து பொது நலனுக்காகப் பாடுபட்டாக வேண்டுமென்பதை மக்கள் உணரவேண்டும். இதை எந்த சர்வாதிகாரியும் தன் ஏவலின்படி நடக்குமாறு

அவர்களை நிர்ப்பந்திப்பதனுல் அல்ல, அவர்கள் தம்மைத் தாமே ஆண்டுகொண்டு தாமும் மக்கள் அனைவருமே நலம் பெறவேண்டுமானுல் இதை அவர்களே செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்வார்களாக! கட்சிப் பூசல்களி டையே நடக்கும் சுய ஆட்சி சுயஆட்சியாயிராது, சுய அழிவாய்த் தானிருக்கும். கிராமமென்பது மக்களெல்லோரும் நேரிடையாகப் பழகும் அடிப் படை ஜன சமூகம், கிராமங்களில் எல்லோரும் ஒன்ருய்ச் சேர்ந்து தம் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டியிருக்கிறது என்பதை நாம் நினை வில் இருத்துவோம். இந்த கிராமம் இப்போது ஒற்றுமை சிறிதுமில்லாத, பிளவுபட்ட கூட்டமா யிருக்கிறது. தேர்தல் போட்டிகளினுல் அது மேலும் பல துண்டுகளாகுமாறு செய்யப்படுமா னுல் அது ஜனநாயகத்தைக் கேலி செய்வதாகவோ, உள்ளவை போதாவென்று புதிய கஷ்டமொன்று வந்ததாகவோதான் இருக்கும். இதற்குள்ளேயே நாட்டின் சில பகுதிகளில் பஞ்சாயத்து ஆட்சியின் பெயரால் கிராமங்களில் புதிய சண்டைகளைத் தோற்றுவிப்பதைவிட இதுவரையில்போல் இருந்து வருதலே மேலென்று சொல்லத் தொடங்கிவிட்டார் கள். இதற்குக் காரணம், தேர்தல் போட்டிகளின் விளைவாகத் தோன்றிய மனக் கசப்புகள் பல பஞ் சாயத்துக்களை வேலை எதுவுமே செய்யமுடியாது ஸ்தம்பிக்கச் செய்து விட்டதுதான். இதே நிலைமை நீடிக்குமானுல் சிலவாண்டுகளுக்குள்ளேயே பஞ் சாயத்து ஆட்சி என்று சொன்னதும், 'வேண்டாம் வேண்டாம்' என்று எல்லோரும் காதைப் பொத்திக் கொள்வார்கள்; மத்திய-ராச்சிய அரசாங்கங்

கள் பழைய கெடுபிடி அதிகார வர்க்கத்தைக் கொண்டு நடத்தும் ஆட்சியை இரு கைகளாலும் வரவேற்பார்கள்; மக்கள் ஜனநாயகம் என்ப தெல்லாம் வெறும் ஏமாற்று வித்தை, நடக்கக் கூடாதது என்று சொல்லுவார்கள். இவ்வாறெல் லாமானால் அது இந் நாட்டில் ஜனநாயகத்திற்கு விழுந்த பெரிய அடியாக இருக்கும். அது, முதல் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ள—இப்போது இங்கே ஜனநாயகம் இருந்துவரும் நிலையில், சர்வாதிகாரத்திற்கு நேரே வழியைத் திறந்துவிட்டு விடும்.

இதற்கு நேர்மாருக, இப்போது கிராமங்களெல் லாம் சுயநலம், சாதி அபிமானம் முதலிய கார ணங்களினால் பிளவுபட்டுக் கிடப்பதால், போட்டி யில்லாமல் ஏகோபித்து பஞ்சாயத்துக்களுக்கு தேர் தல் நடத்துதல் நடக்கக்கூடாத பேச்சு என்று சொல்லப்படுகிறது. போட்டியின்றி ஏகோபித்தே தேர்தல் நடக்க வேண்டுமென்று மேலே சொல்லி யிருப்பதற்குக் காரணமே கிராமங்களின் தற் பொழுதைய பிளவுபட்ட நிலைமைதான்; ஏகோ பித்து தேர்தல் நடத்தினால்தான் சமூகம் முழு தும் அடுத்துச் செய்ய வேண்டியுள்ள புன ரமைப்பு, அபிவிருத்தி ஆகிய வேலைகள் அனை வரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்பெறும்.

ஆயினும் இவ்வாதம் அடிக்கடி சொல்லப்படுவ தாகையால் இதில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்பதை அறியும்பொருட்டு இதை நன்கு ஆராய் வோம். கிராமங்களில் மாறுபட்டவையும் முரணு வையுமான சுயநலமுள்ளவர்கள் இருக்கின்றனர் என்பது உண்மை. ஆனால் பஞ்சாயத்துக்களினால்

பெரிய சமூக–பொருளாதார மாறுதல் எதையும் அங்கே செய்ய முடிந்துவிடப் போவதில்லை. அதனுல் நில உடைமையை நீக்கவோ, குடிவாரச் சட்டங்களை மாற்றவோ, நிலத்தைப் புதிய முறையில் விநியோகிக்கவோ, பணம் கொடுத்தல் வாங்குதல், வட்டி விகிதங்கள் பற்றிச் சட்டமியற்றவோ–இவை போன்ற வேறு எதையும் செய்யவோ ஆகாது. மக்கள் சபை, இராச்சிய சட்டசபை ஆகியவைகளின் தேர்தல்களில் கிராமங்களிலுள்ள கட்சிகளும் பிரிவினைகளும் நன்கு வெளியாகலாமாயினும் பஞ்சாயத்து தேர்தல்களில் அவை முக்கியமல்ல. கிராமங்களில் நிலவும் பொருளாதார, சமூகப் பிரிவினைகளுக்கு உண்மையான மருந்துகள், (அ) அவசியமான பொருளாதார, சமூகச் சீர்த்திருத்தங்களுக்கான சட்டங்களை விரைவில் இயற்றுதலும், (ஆ) இவை சம்பந்தமாக ஏற்கெனவேயுள்ள சட்டங்களை சரியாகவும் கண்டிப்பாகவும் அமுல் நடத்துதலும், (இ) மிகவும் முக்கியமானதாயிருந்தும் இதுவரை அசட்டை செய்யப்பட்டுள்ள முதியோர் கல்வியை தீவிரமாக நடத்துதலுமேயாகும். இவற்றை விட்டு உள்ள சண்டை சச்சரவுகள் போதாவென்று அவற்றை மேலும் ஊக்குதலோ, கிளறிவிடுதலோ சரியல்ல.

நான் சொல்லிவரும் விஷயத்தைவிட்டு, இப்போது இன்னெரு முக்கியமான விஷயத்தை வற்புறுத்த விரும்புகிறேன். அதாவது, கிராமங்களின் பொருளாதாரமும் சமூக வாழ்க்கையும் அங்கே ஏற்கெனவே இருந்து வரும் அரசியல், பொருளாதார நிறுவனங்களும் சரியாகவும் ஒற்றுமையாக

வும் இயங்குவதற்கு நாம் உடனே செய்யவேண்டியவை, கிராம நிலங்கள் முழுவதையும்—அவற்றின் நிர்வாகத்தையும் கிராம சபையின் பொறுப்புக்கு மாற்றுதலாகும். அவ்வாறு மாற்றிவிட்டால் கிராம வாசி ஒவ்வொருவருக்கும் நிலத்தில் சமபங்கும் உரிமையும் ஏற்பட்டு, ஒவ்வொருவர் நலனுக்கும் பொது நலனுக்குமாக அது பயன்படுத்தப்படுவதற்கு வசதியாகி விடும். நம் நாட்டில் உள்ள நிலத்தை ஒவ்வொரு மனிதனுக்கும் விகிதித்துக் கொடுப்பதென்றால் உள்ள நிலமோ மிகவும் குறைவு, நிலத்தை நம்பியே பிழைக்க வேண்டியுள்ள மக்கள் தொகையோ ஏராளம். நகரங்களும் அவற்றின் மக்கள் தொகையும் ஒருபுறம் வளர்ந்து வந்தாலும், கிராம மக்களின் தொகையும் பெருகுமென்றே நினைக்க வேண்டியிருக்கிறது. மேலும், புதிய தலைமுறை தோன்றுந்தோறும் ஏற்கெனவே துண்டாடப்பட்டுள்ள நிலம் மேலும் சிறு சிறு துண்டுகள் ஆக்கப்படும். இவற்றோடு அமுலிலுள்ள குத்தகை, வாரம் முதலிய விவசாய முறைகளும், அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டங்களும், அவற்றின் நிர்வாகமும் மிகவும் சிக்கலாகி வழக்குகளுக்கும் லஞ்சம் முதலிய கெட்ட பழக்கங்களுக்கும் நல்ல வசதியாயிருக்கும் நிலையில் நான் மேலே குறிப்பிட்ட ஒன்றைத் தவிர வேறு எந்த நிலச் சீர்திருத்த நடவடிக்கையினாலும் ஒரு பயனும் விளையாது. அதிர்ஷ்டவசமாக விநோபா அடிகள் நடத்தும் பூதான-கிராமதான இயக்கம் இம்மாதிரியான புரட்சிகரமான விவசாயச் சீர்திருத்தச் சட்டம் இயற்றுவதற்கு மிகவும் பக்குவமான சூழ்நிலையை உண்டாக்கி யிருக்கிறது.

நிற்க, நான் சொல்லிவந்த முக்கிய விஷயத்திற்குத் திரும்புகிறேன். பஞ்சாயத்துக்குள்ள வேலைகள் என்னவென்று பார்ப்போம். அதன் முக்கிய வேலை, கிராம அபிவிருத்திக்கான திட்டங்கள் வகுத்து, அவற்றிற்கு கிராம சபையின் அங்கீகாரம் பெற்று, அவற்றை நிறைவேற்றுதலே. இங்கே நம் முன்னுள்ள பிரச்னை பஞ்சாயத்தை கிராமம் ஏகோபித்து அமைக்கையில் இதைச் சரியாகச் செய்ய முடியுமா, அல்லது கிராமத்தின் பிளவுகளையும் பூசல்களையும் அது பிரதிபலிப்பதாயிருந்தால் முடியுமா என்பது. கிராம நிலையில் சிறிது பழக்கம் உள்ளவர்களாலும் இதற்கு வெகு சுலபமாய் பதில் சொல்லிவிட முடியும். எல்லோரும் தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள சேர்ந்து பாடுபட வேண்டுமென்று ஒரு மூச்சில் சொல்லிவிட்டு, உடனேயே அதே நோக்கத்திற்காக அதிகாரம் பெறும் பொருட்டு போட்டியில் இறங்கி சண்டை போட வேண்டுமென்று சொல்லும் மனப்பான்மையுள்ளவர்கள் இருப்பதை நினைக்கத் தான் வருத்தமாயிருக்கிறது!

போட்டிக்கு இடமில்லாது ஏகோபித்தே தேர்தல்கள் நடத்துவதென்று சொன்னாலும், கிராம சமூகங்களில் பரம்பரையாக அதிகாரமும் அந்தஸ்தும் பெற்றுள்ளவர்கள் எப்படியும் பஞ்சாயத்துக்களைப் பிடித்துக் கொண்டுவிடுவார்கள் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு நடப்பது சாத்தியமே; ஏன், ஏற்கெனவே நடந்திருப்பதும் நமக்குத் தெரியும். ஆனால் இது ஏகோபித்த தேர்தலில் மட்டும்தானா நடக்கும்? போட்டியோடு நடக்கும் தேர்தல்களிலும் நடக்கக் கூடியதே; இதற்கு

முன் நடந்துமிருக்கிறது. இதற்குப் பரிகாரம், தேர்தலில் போட்டிக்கு இடமளிப்பதல்ல, புத்தி சாலித்தனமாகவும் தீவிரமாகவும் சமூக, பொருளாதாரச் சீர்திருத்தங்களைச் செய்தலும், பொது மக்களுக்கு கல்வியளித்து அவர்கள் அறிவை வளர்த்தலுமேயாகும்.

இவ்விஷயத்தின் இன்னொரு முக்கியமான அம்சத்தையும் வற்புறுத்தியாக வேண்டியிருக்கிறது. தனக்குள்ள நியாயமான பொறுப்புக்களை கிராமப் பஞ்சாயத்து சரிவர நிறைவேற்ற வேண்டுமானால், சமூகத்தின் கீழ்ப்படியிலுள்ள ஏழை எளியோருக்கும், இதுவரை ஒதுக்கப்பட்டு வந்துள்ளவர்களுக்கும் குறைந்த பட்ச சமூகப் பாதுகாப்பும் பொருளாதார வசதியும் ஏற்படுவதற்குத் தேவையானவைகளைச் செய்ய வேண்டும். இதற்கு உதவும் சட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படாதிருக்கும் நிலையில் கிராமங்களின் பொருளாதார, சமூக அமைப்பை மாற்றுவதற்கு உள்ள ஒரே வழி, கிராமங்களிலுள்ள அதிக சொத்தும் வசதியும் உள்ளவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று, அவர்கள் தாமாக தம் செல்வத்திலும் திறமையிலும் நேரத்திலும் ஒரு பகுதியை தம் அண்டை அயலிலுள்ள எளியோருக்கு அளிக்க முன்வருமாறு செய்தலே. இதற்கெனச் செய்யப்படும் வேறு எந்த முயற்சியினாலும் நம் நோக்கம் நிறைவேருது; அது காரியத்தைக் கெடுத்துவிடவும் கூடும். கிராமத்தின் பிற்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் பரம்பரையான மேல் வகுப்பாரைத் தேர்தலிற் தோற்கடித்து பஞ்சாயத்தைக் கைப்பற்றிய விடங்களிலும் தோற்ற வகுப்பார் ஒத்துழைக்க மறுத்ததனாலும், அவர்

களின் எதிர்ப்பினாலும் ஜெயித்தவர்களினால் எதுவுமே செய்ய முடியாமல் போகிறது என்பது அனுபவம். கிராமங்களில் கட்சிச் சண்டைகளும் சமூகப் பூசல்களும் கிளம்பிவிட்டால் உதவி மிகவும் தேவையாயுள்ள பிற்பட்ட வகுப்பினருக்கே அவை பெரிய தீங்காய் இருக்கும்.

எனவே எவ்வகையில் பார்த்தாலும் கிராமப் பஞ்சாயத்துத் தேர்தல்களில் போட்டியே கூடாது என்ற ஒரே முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. இதைச் செய்வது எப்படி என்பதே இப்போது எழும் கேள்வி. இதற்கு பலர் பல யோசனைகள் கூறியிருக்கிறார்கள்; சில அமுலாகியும் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமாக பழைய சௌராஷ்டிர ராச்சியத்தில் திரு. யு. என். தேபர் முதல் அமைச்சராயிருந்தபோது செய்யப் பட்ட சோதனைகளைக் குறிப்பிடலாம். இந்தக் கொள்கையை ஒப்புக் கொண்டு விட்டால் அதை நடத்துவதற்கான வழியைக் கண்டு பிடிப்பதில் சிரமமிராது. துரதிர்ஷ்டவசமாக, தேர்தலில் போட்டி கூடாதென்றால் அது எப்படி ஜனநாயகமாகுமென்று சிலர் கேட்கிறார்களே; இந்த யோசனையில்லாத, நாட்டின் நிலைமையை அறியாது, புத்தகத்தில் படித்ததையே சொல்லிக் கொண்டிருக்கும் சிலர் இருப்பதுதான் வழி ஒன்றைக் கண்டு பிடிப்பதற்கு முட்டுக்கட்டையாயிருக்கிறது. ஆனால் வழியைக் கண்டாலல்லது பஞ்சாயத்து ஆட்சி வெற்றி பெறவே செய்யாது என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளுக்கு, போட்டிக்கு இடமில்லை யென்றால் கிராமங்களில் தமக்கு

வேலையே இராதோ என்று தோன்றலாம். இவ்வாறு தோன்றுதல் சரியல்ல. அப்போதுதான் அவர்கள் கிராமங்களில் உருப்படியாக வேலை செய்ய முடியும். அவர்கள் போட்டியின்றி ஏக மனதாக பஞ்சாயத்துக்களைத் தேர்ந்தெடுத்தலொன்றே கிராமத்திற்கு நல்லது என்பதை ஒப்புக்கொண்டு விடும்போது அதுவே அவர்களுக்கு ஒரு பெரிய சவாலாய், பரீட்சையாய் ஆகிவிடுமாகையால் அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மக்களை அதற்காகப் பயிற்றவும் அவர்களை வழிக்குக் கொண்டு வரவும் வேண்டியிருக்கும். இதைவிட உருப்படியானதும், ஆற்றலைச் சோதிக்கக் கூடியதுமான வேலை வேறு என்ன இருக்க முடியும்? அவர்கள் தம் சொந்த ஆசைகளையும், தாம் மேலே வர வேண்டும் என்ற எண்ணத்தையும் ஒரு புறம் கட்டி வைத்து விட்டால் இதைச் செய்தல் அவர்களுக்குச் சிரமமாயிராது. ஏனெனில் அப்போது அவர்களுக்கு கிராமக் காரியங்களில் அரசியல் கட்சி வித்தியாசங்களுக்கு இடமே இல்லையென்பது விளங்கி விடும்.

இங்கே ஒரு விஷயத்தைத் தெளிவாக்கி விடுதல் அவசியம். இதுவரை சொல்லிவந்துள்ளதிலிருந்து நாம் கிராம சபைகள் பற்றிச் சொன்னோமேயன்றி நகரசபைகளின் பெயரையே எடாததிலிருந்து நாம் பேசும், நிறுவ நினைக்கும் ஜனநாயக ஏற்பாட்டில் கிராமங்களுக்கு மட்டுமேதான் இடமோ, நகரங்கள் ஒதுக்கப்பட்டு விடுமோ என்ற ஐயம் எழலாம். இது சரியல்ல, இந்த ஐயத்திற்கு இடமே இல்லை. பஞ்சாயத்து ஆட்சி அல்லது மக்கள் பங்கு கொண்டு நடத்தும் ஜனநாயகத்தில் நகரங்களுக்கு

இடமில்லை யென்றால், அதற்கு அர்த்தமே இல்லை. தற்சமயம் கிராமங்களில் மட்டுமே பஞ்சாயத்து ஆட்சி அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படினும், இது போகப் போக நாடு முழுவதிலும் பரவுகை யில் நகரங்களில் இப்போது நிலவும் ஜனநாயக நிறுவனங்களும் இதோடு இணைக்கப்படும். அப் போது கிராமம் என்பது இப்பொழுதைய கிரா மத்தை மட்டும் குறிக்காது, நகரத்திலோ கிரா மத்திலோ வாழும் அடிப்படையான மக்கள் சமூகத்தையே குறிக்கும். பெரிய நகரங்களிலும் பட்டணங்களிலும் வாழ்பவற்றை அடிப்படைச் சமூகங்களென்று சொல்லமுடியாதாயினும் அவை யும் பொதுவாக கிராம சமூகங்களைப் போன்ற வட்டங்களின் சமூகங்கள் பல சேர்ந்து அமைந்தவையே. வட நாட்டில் 'மொஹல்லா' என்பதையும் தமிழ் நாட்டின் வட்டம் என்பதை யும் இம்மாதிரியான சமூகங்கள் என்று சொல்ல லாம். எனவே பெரிய நகரங்களையும் இவ்வாறு பல சிறிய வட்டங்கள் அல்லது ஆரம்பச் சமூகங்கள் சேர்ந்த கூட்டு என்று கருதலாம். யுகோஸ்லோவியாவின் நகரங்கள் இம்முறையி லேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே நக ரங்களின் பல பகுதிகளும் வட்டங்களும் கிராமப் பகுதிகளும் நகரப் பகுதிகளும் சேர்ந்து அமைந் தவையாய், தம் நிர்வாகம் முழுவதையும் தனித் தனியே நடத்திக் கொண்டு, இவ்வாறு நடக்கும் பிற வட்டங்களுடன் சேர்ந்து கிராமமும் நகரமும் சேர்ந்த மாவட்டங்களாய் இருப்பதைப் பார்க் கிறோம். நம் பெரிய நகரங்களும் பட்டணங்களும் குவியல் முறையில் மத்திய இடம் ஒன்றிலிருந்து

நிர்வகிக்கப்படுவது என்பது பஞ்சாயத்து ஆட்சி தத்துவத்திற்கே மாறுனதாகும். இவ்வாறு நடந்தால் நகர மக்கள் நகரத்தின் காரியங்களில் கலந்து கொள்வதற்கு அதிக இடமிராது. நகரசபைச் சட்டங்களில் மக்கள் பங்கு கொள்ளும் ஜனநாயகத்தின் அல்லது பஞ்சாயத்து ஆட்சியின் அம்சங்களேயும் சேர்த்துத் திருத்தி அமைத்தல் சிரமமன்று.

ஏழாவதாக, பஞ்சாயத்து ஆட்சியின் அன்ருட நடவடிக்கைகள் இராச்சிய அரசாங்கங்களின் அதிகாரத்திற்கு உட்பட்டதாய் இருக்கக் கூடாது. இப்போது பஞ்சாயத்து ஆட்சி இராச்சிய சட்டசபைகளில் சட்டம் நிறைவேற்றியே அமுலாகி வருகிறது. இதுவே சரி. இதில் தவறு ஒன்றுமில்லே. இதோடு நில்லாது, இராச்சிய அரசாங்கங்களுக்கு சட்டத்தின் நோக்கத்திற்கும் போக்கிற்கும் முரணில்லாத தேவையான விதிகள் வகுக்க அதிகாரம் இருத்தலும் நியாயமே. சில சமயங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்கள் முக்கியமான அம்சங்களில் பொத்தாம் பொதுவில் இருப்பதால் அரசாங்க நிர்வாகிகள் வகுக்கும் விதிகளுக்கு சட்டத்தைவிட அதிக முக்கியத்துவம் ஏற்பட்டு விடுகிறது. ஆனுல் இதைக் கவனிக்க வேண்டிய வேலே சட்ட சபைகளுடையதாகும்.

நான் இங்கே சொல்ல விரும்புவது, தேவையான சட்டங்களும் அவற்றின் கீழுள்ள விதிகளும் அவற்றிற்கென உள்ளவர்கள் மூலம் இயற்றப்பட்டானபின், அவற்றை அமுல் நடத்தும் பொறுப்பு பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் (Public Service Commission), தேர்தல் கமிஷன், சர்வ

கலாசாலை மானிய கமிஷன் முதலியவை போன்ற சுதந்திர நிறுவனம் ஒன்றின் வசம் விடப்பட வேண்டுமென்பது.

பார்லிமெண்டரி முறையில் நடக்கும் அரசாங்கங்கள் எல்லாமே கட்சி முறையில் நடப்பவை; ஆகவே அரசாங்கங்கள் எல்லாம் தம் கட்சியின் நலனையே முக்கியமாய்க் கருதும் என்று நாம் எண்ணிவிட்டாலும் ஒவ்வொரு அரசாங்கமும் புதிய நடவடிக்கையொன்றை யெடுக்குமுன் அதனால் தம் கட்சிக்குள்ள லாப நஷ்டங்களை யோசித்தல் இயல்பு. இவ்வாறு அவை செய்யாதிருப்பது அவை மனிதர்களாலானவையாயிராது தேவர்களுடையதாய் இருக்கையில்தான் சாத்தியம். கட்சியின் நலன் என்னும்போது அதுவே பொதுமக்கள் நலனாகவும் இருக்கவேண்டுமென்பதில்லை. அதிகாரத்திலுள்ள அரசியல் கட்சிகளுக்கு பஞ்சாயத்து ஆட்சி நடைபெறும் நிறுவனங்கள் முழுவதையும் கைப்பற்றி அடக்கியாளுதல் நல்லதாயிருக்க, கட்சிப் போட்டிகளிலும் பூசல்களிலும் பயன்படுத்தப்படாதிருத்தல் பஞ்சாயத்தின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அவசியமாகும். பொதுஜனக் காரியங்களின் தரம் வரவரக் குறைந்துவரும் இத்தருணத்தில் இராச்சிய அரசாங்கமோ சம்பந்தப்பட்ட அமைச்சரோ பஞ்சாயத்து விவகாரங்களில் தலையிட ஆரம்பித்தால், அது கட்சியின் நலனைப் பார்ப்பதோடு நில்லாது, சாதி நலனிலும் சமூக நலனிலும் சொந்த நலனிலும் போய் முடியலாம். இப்பொழுதே நாட்டின் பல பகுதிகளில் எதிர்க்கட்சிகள், ஜில்லா போர்டுகளும் நகர சபைகளும் கட்சி நலனையும் சொந்த

நலனையும் கருதிக் கலைக்கப்படுகின்றன, அவற்றின் தேர்தல் அனுவசியமாய் ஒத்திப் போடப்படுகிறது என்று புகார் செய்கின்றன. இந்த ஸ்தல ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் வேறு வகைகளில் ஆளும் கட்சியார் தலையிடுவதாகவும் புகார்கள் எழுந்திருக்கின்றன.

இதில் இன்னொரு விஷயமும் உள்ளது. அதாவது, ஒரு முறை அதிகாரத்திற்கு வந்தவர்கள் அதைவிட விரும்புவதே இல்லையென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்போதுள்ள நிர்வாக ஏற்பாட்டில் இராச்சியங்களைப் பற்றிய வரையில் அமைச்சர்கள்—அவர்களின் ஆதரவாளர், உயர்தர உத்தியோகஸ்தர் என்ற இருவர் கூட்டாகச் சேர்ந்து நிர்வாகம் நடத்துகிறார்கள். இந்த இருவருக்குமே மேலே குறிப்பிட்ட, கையிலுள்ள அதிகாரத்தைத் துறக்க மனமில்லாமை என்ற பலவீனம் இயல்பாயிருக்குமாகையால் அவர்கள் பேச்சளவில் தமக்கு எதுவுமே வேண்டாமென்று சொல்லிக்கொண்டு, காரியத்தில் எதையும் விடாமல் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கலாம்.

மேலே கூறிய பல காரணங்களுக்காகவும் பஞ்சாயத்து ஆட்சியை நிர்வகித்து வளர்க்கும் வேலையையும், அது சம்பந்தமாய் ஸ்தாபனம் முழுவதற்கும் உதவுதல், வழி துலக்குதல், மேற்பார்வையிடல் ஆகிய வேலைகளையும் சிவில் நிர்வாகத்தைச் சேராத ஒருவர் தலைமையிலுள்ள தனிக் கமிஷனின் பொறுப்பில் விடுதல் நலம். சிவில் ஊழியரை இதில் சேர்க்கக் கூடாதென்பதற்கு அவர் அரசாங்கத்தின் ஏவலின்படி நடக்க வேண்டியவராயிருப்பார், பஞ்சாயத்து ஆட்சியின்

கீழ் உள்ள ஊழியர்களின் உரிமைகள், சலுகைகள் விஷயத்தில் பட்சபாதம் காட்டுவார் என்பதே காரணமாகும். இந்தப் பஞ்சாயத்து ஆட்சிக் கமிஷனின் வேலைகள், சட்டப்படி அமைக்கப்பட வேண்டிய பல்வேறு கமிட்டிகள் சரியாக அமைக்கப்பட்டு வேலை செய்யுமாறு பார்த்துக் கொள்ளுதலும், இராச்சிய—மத்திய அரசாங்கங்கள் ஒதுக்க வேண்டிய பணத்தை முறைப்படி ஒதுக்கிச் செலவு செய்யச் செய்தலும், அரசாங்கத்தின் மேல் படிகள் கீழ்ப்படிகளின் வேலைகளில் காரணமின்றியும் அளவை மீறியும் தலையிடுவதைத் தடுத்தலும், நிர்வாகத்திற்காக உள்ள ஊழியர்களெல்லாம் சட்டத்தில் விதித்துள்ளபடி ஜனநாயக முறையில் ஒழுங்காய் வேலை செய்து வருகையில் அவர்களின் நலன்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுதலும், பஞ்சாயத்து ஆட்சிக்குட்பட்ட ஒரு ஸ்தாபனமோ அதிகாரியோ அல்லது ஊழியரோ தவறு செய்தால் கண்டித்துத் திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்தலுமாகும். இந்த கமிஷனின் வேலைகள் அழிப்புத் தன்மையவையாய் இராது ஆக்கமளிப்பவையாய் இருக்க வேண்டும். அதாவது, பஞ்சாயத்து ஆட்சி வலுவுடன் திறமையாகவும் சுயமாகவும் வேலைகளைச் செய்வதற்கு, அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கும் தனி மனிதர்களுக்கும் உதவுதலும் கமிஷனின் கடமையாய் இருக்க வேண்டும்.

மக்கள் சபையின் உறுப்பினராயுள்ள திரு என். ஜி. ரங்காவே முதன் முதலில் இந்த கமிஷன் பற்றிய யோசனையை மக்கள் சபையில் சொன்னார். அவர் எதிர்க் கட்சியின் தலைவர்

என்ற காரணத்திற்காக இந்த யோசனைக்கு அதற்குரிய மதிப்பளியாமலோ, அதை ஏற்காமலோ இருத்தல் சரியல்ல.

பஞ்சாயத்து ஆட்சி செயல்பட வேண்டிய விதத்தைச் சொல்லி முடிக்குமுன், இதற்கு எதிராகக் கூறப்படும் இரண்டு விஷயங்களைச் சுருக்கமாய்ச் சொல்லிவிட விரும்புகிறேன். 'கிராம மக்கள் மிகவும் பிற்போக்கானவர், அறிவில்லாதவர், உலகமே தெரியாதவர்; ஆகையால் அவர்களால் கிராமநிர்வாகம் ஆகாது' என்பது ஒரு ஆட்சேபம். பல நூற்றாண்டுகளாக நம் சமூகம் இருந்துவரும் விதத்தில் கிராம மக்கள் சில விஷயங்களில் மிகவும் பிற்போக்காய் இருப்பதைத் தவிர்க்க முடிந்ததில்லை. ஆனால் ஒப்பிட்டுப் பார்க்கையில் நேர்மையிலும் யோக்கிய பொறுப்பிலும் அறிவாற்றலிலும் நகரங்களின் பிரமுகர்களைவிட அவர்கள் அப்படியொன்றும் குறைந்தவர்களல்ல. ஆனால் இதைக் காரணமாய்ச் சொல்லி சுய ஆட்சியைத் தர மறுத்தல் தவறு மட்டுமல்ல, அது ஜனநாயகத்தையே மறுப்பதும், அதிகப் பிரசங்கித்தனமுமாகும். நம்மை சமீப காலம் வரை ஆண்டு வந்த அந்நியர்களும் இதே காரணங்களைச் சொல்லித்தான் இந்தியாவுக்கு சுதந்திர உரிமையை மறுத்து வந்தார்கள் என்பதை நாம் இந்த சந்தர்ப்பத்தில் நினைவுறுத்திக்கொள்வோமாக. ஆனால் இம்மாதிரியான வாதத்திற்கு 'ஒன்று எவ்வளவு சிறந்த அரசாங்கமாயிருப்பினும் அது சுய ஆட்சிக்கு ஈடாகாது' என்று எவ்வளவோ காலத்திற்குமுன் பதில் சொல்லப்பட்டாகிவிட்டது.

மேலும், இம்மாதிரியான அர்த்தமில்லாத

ஆட்சேபங்கள் சொல்லுவோர் சிறிது யோசித்துப் பார்ப்பார்களாயின் தாம் எல்லாம் தெரிந்தவர்கள், கிராமத்தாருக்கு ஒன்றுமே தெரியாது என்ற அவர் கள் எண்ணம் மாறி, பணிவு பெறுவார்கள். ஏனெனில் இந்தப் பிற்பட்ட கிராம மக்களே இந்த முற்போக்கான நகரவாசிகளிடம், 'நீங்கள் தம்மை ரொம்பவும் பெரியவர்கள், உயர்ந்தவர்களென்று எண்ணிக்கொண்டு விடவேண்டாம். அவ்வாறே வைத்துக் கொண்டாலும், நீங்கள் அப்படி என்ன சிறப்பாகவோ, வெற்றிகரமாகவோ நாட்டின் விவ காரங்களை நடத்திவருகிறீர்கள்?' என்று கேட்க அதிக நேரமாகாது.

ஆரம்பம் முதலே பஞ்சாயத்து ஆட்சியின்கீழ் தாம் பெறவிருக்கும் அதிகாரங்களையும் வசதி களையும் அவர்கள் மிகவும் திறமையாகச் செலுத்து வார்கள், உபயோகிப்பார்களென்று நான் சொல்ல வரவில்லை. அவர்கள் பிழைகள் பல செய்யத்தான் செய்வார்கள். ஆனால் சுய ஆட்சிக்குத் தேவை யான திறமையும் சாமர்த்தியமும் பொறுப்புக்களை நேரிடையாக ஏற்றுக் காரியங்கள் செய்தால்தானே வரும்? மேலும், அவர்கள் பிற்பட்டவர்களென்றால் அதை மாற்றி அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு வழி, அவர்களுக்கு ஆட்சி உரிமையை மறுப்பதல்ல, கூடிய விரைவில் கல்வியும் பயிற்சியும் அளித்தலேயாகும். இதற்குச் சுணங்குகிறவர்களே கிராம மக்கள் பிற்போக்கானவர், அவர்களால் ஒன்றும் ஆகாது என்று பேசுவார்கள்.

பஞ்சாயத்து ஆட்சிக்குச் சொல்லப்படும் இன் னொரு ஆட்சேபம், 'கிராம சமூகம் சம்பிராதாய மான வழியில் நடந்தே பழகியும், பரம்பரையாக

அவர்களை அடக்கி வந்துள்ளவர்களுக்கு உட்பட்டும் இருந்து வந்திருப்பதால், கிராம ஜனநாயகம் பிற்போக்கானதாகவே இருக்கும், பல தலைமுறைகளாய் மக்களை அடக்கியாண்டு வந்துள்ள வகுப்பாரே பஞ்சாயத்து ஆட்சியில் நிறுவப்படும் அரசியல், பொருளாதார நிறுவனங்களையும் தங்கள் அந்தஸ்தும் செல்வாக்கும் மேலும் வளர்ந்து நீடிக்க உதவுமாறு செய்து கொள்வார்கள்' என்பது. இந்த ஆட்சேபத்தில் ஓரளவு உண்மையில்லாமல் இல்லை. ஆனால் இதற்கும் நாம் செய்யவேண்டிய பரிகாரம் மக்களை நம்பாமல் இருப்பதும், ஜனநாயக தத்துவம் கிராமங்களிலும் பரவுவதைத் தடுப்பதுமல்ல. இங்கும் நாம் முக்கியமாகச் செய்யவேண்டியது மக்களுக்குக் கல்வியளித்தலே, உரிமைகளையும் கடமைகளையும் அவர்களுக்கு உணர்த்துதலே. இதைச் செய்யாது எந்தப் பெரிய மாறுதலையும் உண்டாக்க முடியாது. கிராமங்களிலெல்லாம் உறுதியுடனும் ஊக்கத்தோடும் கல்வியைப் பரப்ப ஏற்பாடு செய்யாத பொழுது மேலேயிருந்து முன்னேற்றத்தைக் குறிக்கும் சட்டங்கள் எவ்வளவு இயற்றினாலும் பயனில்லை. இதற்கு இன்னொரு பரிகாரம், பஞ்சாயத்து ஆட்சியின் அமைப்பிலேயே அதில் நிர்வாகம் வகிப்போருக்கு சமூகத்தின் பிற்பட்ட, பலவீனமான வகுப்பாரை முன்னுக்குக் கொண்டு வருதலும் கடமையாகும் என்று கூறும் பாதுகாப்புக்களையும் உறுதிகளையும் சேர்த்துவிடுதலாகும்.

இறுதியாக, மக்களுக்கு சுய ஆட்சிக்கான சந்தர்ப்பங்களும் அதிகாரங்களும் வழங்க மறுத்தல், இந்நாட்டில் ஜனநாயகம் செல்லரிக்கப்

பட்டு முற்றிலும் சோடையாகி மேன்மேலும் இழிந்து அழிந்துபோவதிலோ, ஏதோ ஒருவகை யான சர்வாதிகாரம் தோன்றுவதிலோ தான் போய் முடியுமென்று எச்சரிக்கிறேன்.

III

பொருளாதார ஏற்பாடுகள்

நாம் முந்திய அத்தியாயத்தில் ஆராய்ந்தது முழுதும் அரசியல் விஷயங்கள். ஆனால் இப் போது நம் சமூகத்தின் அரசியல் அமைப்பு மட்டு மல்ல, பொருளாதார அமைப்பும்—தனியார் துறை யிலும் சரி, பொதுத் துறையிலும் சரி—தலைகீழ்க் கோபுரம் போன்றே இருக்கிறது. இந்தத் தனியார் துறை, பொதுத் துறை யென்பவை வெவ்வேறான வையல்ல; சமூகம் என்ற வீட்டின் ஒன்றோ டொன்று இணைந்த இரு பகுதிகளே இவை. ஆகவே கவனித்துப் பார்ப்பவர், கருத்துச் செலுத்துபவர் எவருக்கும் அரசியல் அமைப்பை மட்டும் சரியாக அமைத்தலென்பது, பொருளா தாரத்திலும் அதே வகையில் பருத்த பக்கத்தை அடியிலும் குறுகியதை மேலுமாக அமைத்தாலல் லது முடியாது என்பது தெரியவரும். அதாவது, பொருளாதாரத்தை பரவல் முறையில் அமைக்காத போது அரசியலை மட்டும் பரவலாக கிராமங்களின் அடிப்படையில் அமைத்துப் பயனில்லை.

அபிவிருத்தி திட்டங்களை நடத்திவைக்க மக்கள் ஒத்துழைப்பும் தேவையென்பது உணரப் பட்டதே பஞ்சாயத்து ஆட்சிக் கருத்து தோன்றுவ

தற்குக் காரணமாய் இருந்திருப்பதனுல், இதுவரை அரசியலில் மட்டும் அதிகாரத்தைப் பிரித்துப் பரவலாக்குவதில் கருத்து செலுத்தப்பட்டிருக்க, பொருளாதாரம் சிறிதும் கவனிக்கப்படாதிருந் திருக்கிறது. சமீப காலத்தில்தான் பஞ்சாயத்து ஆட்சி அமைக்கும் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள் பொருளாதாரத்தையும் ஏக காலத்தில் பரவலாக்கி ஞலல்லது அரசியல் அல்லது ஆட்சியை மட்டும் பிரித்துப் பயனில்லை யென்பதை உணர்ந்திருக்கி ருர்கள். காந்தி வழியில் செல்லுவோர் அல்லது சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் வெகு காலமாகவே இவ்விஷயத்தை வற்புறுத்திச் சொல்லிவந்திருந்தும், சமீப காலம் வரை அவர் கள் பேச்சு செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே இருந்து வந்திருக்கிறது. இதற்குக் காரணம், விஞ்ஞானமும் யந்திரக் கைத் தொழில்களும் ஓங்கிவரும் இக்காலத்திலும், இந்தி யாவின் தற்பொழுதைய பிற்பட்ட நிலையிலும் இதைச் செய்வ தெப்படி என்பது எவருக்குமே புரியாதிருந்ததுதான். கதர், கிராமக் கைத்தொழில் கள் என்று பல்லவி பாடிக் கொண்டிருப்பதனுல் பயன் எதுவும் ஏற்படுமென்று தோன்றவில்லை.

அது என்னவென்று எவருக்குமே சரியாய்த் தெரியவில்லையாயினும், இந்தியாவின் ஆட்சி முறையும் சமூக அமைப்பும் சோஷலிஸ்டு ஜனநாயகம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருப் பது ஒரு திருப்திகரமான விஷயமே. இதிலிருந்து நாட்டின் ஆட்சி ஜனநாயக ஆட்சியாகத்தான் இருக்க வேண்டுமென்பதும், சமூக அமைப்பில் அபேத தத்துவங்களுக்கே மதிப்பிருக்கும் என்ப

தும் தெரியவருகின்றன. ஒரு காலத்தில் அபேதவாதிகள் உற்பத்தி சாதனங்களையும் விநியோகத்தையும் நாணயமாற்றையும் பொதுவாக்கிவிட்டால் போதும், பொருளாதார ஜனநாயகம் (Economic Democracy) அதிலிருந்து தானே அமைந்துவிடுமென்று நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் சர்வாதிகாரப் பொதுவுடைமை நிலவும் நாடுகளில் எல்லாத் துறைகளையுமே பொதுவாக்கி யிருந்தும், அங்கெல்லாம் பொருளாதார ஜனநாயகம் இல்லாதிருப்பதைப் பார்க்கிறோம். இதற்கு மாறாக அங்கெல்லாம் இதிலிருந்தே மிகவும் கடுமையான பொருளாதார சர்வாதிகாரம் தோன்றவும், பல புது ரகப் பொருளாதாரச் சுரண்டல்களும் ஏற்றத் தாழ்வுகளும் உண்டாகியிருக்கின்றன. இதனால் ஜனநாயக அபேதவாதிகள் அனைவரும் அல்லவாயினும், அவர்களுள் அதிக உணர்ச்சி உள்ளவர்களும் ஆழ்ந்து சிந்திப்பவர்களும் தம் நோக்கத்தையே கைவிடவேண்டிய நிலைமை வரக்கூடாதென்றால், தாம் வழக்கமாகச் சொல்லிவரும் நாட்டின் பொதுவாக்குதல் என்பதோடு நில்லாது, சமூகத்தில் பொருளாதார நிறுவனங்களையும் முறைகளையும் பரவல் முறையில் அமைத்தாக வேண்டுமென்பதை உணரத் தொடங்கிவிட்டார்கள்; ஆனால் உணர்ந்ததற்கு அதிகமாக இது குறித்து அவர்கள் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை.

இப் பிரச்னை குறித்து விஸ்தாரமாகப் பேசுவதற்கு இது இடமல்லவாயினும் நம் நாட்டின் தற்பொழுதைய நிலையில் பரவல் முறையில் பொருளாதாரம் அமைகையில் என்னென்ன செய்ய

வேண்டும், அதற்குள்ள நிபந்தனைகள் எவை என்பதில் கவனம் செலுத்துதல் உபயோகமாயிருக்கும்.

முதலில், அது சிறிய யந்திரங்களையும் திரளான தொழிலாளரையும் கொண்டு நடப்பதாய் இருக்கவேண்டு மென்பதில் சந்தேகமில்லை. அதோடு கூட, உபயோகிக்கப்படும் சிறிய யந்திரங்களின் சக்தியைப் பெருக்குவதற்கும் இடையருது திட்டமிட்டு முயற்சி செய்தாக வேண்டும். அப்போதுதான் யந்திரங்களின் செலவு கூடாது, அவற்றின் உற்பத்தித் திறன் பெருகும்; அவை அடிக்கடி பழுதாகாமலும் இருக்கும். இதற்குத் தேவையான ஆராய்ச்சிகளுக்கும் பரிசோதனைகளுக்கும் திட்டமிடவும் ஊக்கமளிக்கவும் வேண்டும். சாத்தியமான இடங்களிலும், அவசியமான பொழுதும் மின்சாரம் முதலிய சக்திகளையும் உபயோகித்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு உபயோகிக்கையில் நம் பொதுவான பொருளாதார நோக்கத்தை மறந்துவிடக் கூடாது. கூடிய வரையில் உற்பத்தியாகும் பொருள்களின் அடக்க விலை, அவற்றிற்குள்ள தேவை, அதனுல் தொழிலாளருக்குக் கிடைக்கக் கூடிய வேலை ஆகியவற்றினிடையே பொருத்தம் இருக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, இந்தப் பரவல் பொருளாதார ஏற்பாட்டின் நோக்கம் ஸ்தலத்திலும் வட்டாரம் அல்லது பிரதேசத்திலும் உள்ள மனித சக்தி, மூலப் பொருள்கள் ஆகியவற்றை முழுதும் உபயோகிப்பதாயிருக்க வேண்டும். இதற்கு ஒவ்வொரு பகுதியிலும், கிராமத்திலும், வட்டாரத்தி

லும், பிரதேசத்திலும் என்னென்ன தொழில்கள் நடந்திருக்கின்றன, புதிதாக என்னென்ன நடத் தலாமென்பதைப் பார்த்தும் விசாரித்தும் தெரிந்து கொள்ளவும், திட்டமிட்டுச் செய்யவும் வேண்டும். இதைச் செய்கையில் பல்வேறு பொருள்களின் உற்பத்தியையும் அவை பெரும்பாலும் உபயோக மாவதையும் வட்டார வாரியாகவும் பிரதேச வாரி யாகவும் பிரிக்கவேண்டி யிருக்கும். இவ்வாறு செய்கையில் சில கைத்தொழில்களை கிராமக் கைத் தொழில்களென்றும், சிலவற்றை வட்டாரத்தில் செய்யப்பட வேண்டியவை யென்றும், சிலவற்றை மாவட்டம் முழுவதிலும் செய்வதென்றும், சில வற்றை பிரதேசத் தொழில்களென்றும் சிலவற்றை மத்தியத் தொழில்களென்றும் பாகுபாடு செய்ய வேண்டியிருக்கும். இதைச் செய்கையில் இராச்சி யத்திலும் மத்திய அரசாங்கத்தின் பார்வையிலும் நடப்பவை பேரளவில், பெரு முதலீடுடன் நடப் பவை யாயிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இவ்வாறு செய்கையில் ஒரு பகுதியில் உற்பத்தி யாகி ஸ்தலத் தேவைக்குப் போக எஞ்சும் பொருள் கள் அவை உற்பத்தியாகாது தேவை மட்டுமுள்ள பிற பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கே இதே வகையில் எஞ்சியுள்ளவை பிரதியாகப் பெறப்பட மாட்டா என்பதல்ல. ஆனல் பெரும்பாலும் ஒவ் வொரு பொருளும் அதன் உற்பத்திக்கு வசதியான சிறிய பெரிய இடங்களிலேயே தயாரிக்கப்படவும், கூடியவரையில் அந்தந்த இடங்களிலேயே உப யோகிக்கப்படவும் வேண்டும். இம்மாதிரியாக சிறிய அளவில் நடக்கும் கைத்தொழில்கள் மேன் மேலும் செழித்து வளருவதற்கு வேண்டிய நட

வடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. இதைவிட முக்கியமான விஷயம், பேரளவில் குவியல் முறையில் நடக்கும் பெரு முதலீட்டுத் தொழில்களின் போட்டியிலிருந்து இவற்றைக் காத்தலாகும். அப்போது தான் சிறு தொழில்கள் செழித்து வளரும், இலாபகரமாயும் நடக்கும்.

மூன்றுவதாக, இங்கேயுள்ள நிலத்தையும் மக்கள் தொகையையும் கருதுகையில் ஒவ்வொருவருக்கும் இருக்கக்கூடிய நிலம் மிகவும் குறைவாதலாலும், மக்கள் தொகை மேன்மேலும் பெருகிக் கொண்டிருப்பதாலும் விவசாயம் எவ்வளவுதான் அபிவிருத்தி செய்யப்பட்டாலும் மக்கள் ஜீவனத்திற்கு நிலத்தையே நம்பிக்கொண்டிருப்பதாலல், அவர்களை நாளுக்கு நாள் ஏழைமை அதிகம் பீடிக்கவே செய்யும். ஆகையால் மேலே விவரிக்கப்பட்ட கைத்தொழில் ஏற்பாட்டை விவசாயத்தோடு இணைத்து, ஒவ்வொரு கிராமமோ சில கிராமங்களின் தொகுதியோ விவசாயத்திலும் கைத்தொழில்களிலும் தீவிரமாக ஈடுபடும்படி செய்ய வேண்டும். விவசாயத்தோடு இணைந்த கைத்தொழில் அல்லது கைத்தொழிலோடு சேர்ந்த விவசாயம் என்னும்பொழுது விவசாயத்திலல் உற்பத்தியாகும் கச்சாப் பொருள்களை செய்பொருள்களாக்குவதைச் சொல்லவில்லை; இதுவும் ஒரு கைத்தொழிலேயாயினும் விவசாயத்தோடு இயல்பாய்ப் பொருந்தக்கூடிய இன்னும் பல கைத்தொழில்கள் நடத்தப்படுவதையே சொல்லுகிறோம். உதாரணமாக, விவசாயத்திலும் கைத்தொழில்களிலும் ஈடுபடும் ஒரு சமூகம்

கோதுமையையும் நெல்லையும் கையாலோ யந்திரங்களாலோ அரைத்து, காய்கறிகளையும் பழங்களையும் கரும்பையும் பருத்தியையும் உபயோகத்திற்கு தக்கதாக மாற்றுவதோடு நில்லாமல், ரேடியோக்கள், சைக்கில் பகுதிகள், சிறிய யந்திரங்கள், மின்சாரக் கருவிகள் முதலிய ஸ்தலத் தேவைகளையும் தயாரித்து உதவும். இதையெல்லாம் செய்வதனுல் இப்போது நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் உள்ள வேற்றுமையும், நகர நாகரிகத்தின் தீமைகளும் போகப் போகக் குறையும்.

நான்காவதாக, தனியார் துறையிலோ பொதுத் துறையிலோ நடக்கும் பெரு முதலீட்டுக் குவியல் முறைத் தொழில் அமைப்பைப் போல் பரவல் தொழிலும் வாணிபமும் இருக்கமாட்டா; இவற்றின் தன்மையே வேருய் இருக்கும். பரவல் கைத்தொழில்கள் பெரும்பாலும் தொழிலாளர் சொந்தத்திலேயே நடத்துவதாகவோ, கூட்டுறவு முறையில் நடப்பதாகவோ இருக்கும். எனவே இப்பகுதியில் அதிகாரவர்க்க ஆர்ப்பாட்டத்திற்கோ, சுரண்டலுக்கோ இடமிராது. அதோடு கூட குவியல் முறையில் நடப்பதை விட பரவல் முறையில் நடக்கும் தொழில்கள்-பொதுத் துறையிலும் சரி, தனியார் துறையிலும் சரி—சமூகத்தில் சமத்துவம் நிலவ உதவுவபவையாயிருக்கும்.

ஐந்தாவதாக, இந்தப் பொருளாதார அபிவிருத்தியில் பஞ்சாயத்து ஆட்சியின் கீழ் அமைக்கப்படும் அரசியல் நிறுவனங்களுக்கு முக்கியப் பங்கு இருக்குமாகையால் இதைச் சரியாய் நடக்கச் செய்தல் எப்படியென்பதைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

இந்த அத்தியாயத்தை முடிக்குமுன் பொதுப் படையான சில விஷயங்களைக் குறிப்பிட விரும்பு கிறேன். முதலில், வழிவழியாக வந்துள்ள உற் பத்தி முறைகளைப் பத்திரமாய்ப் பாதுகாப்பதில் எனக்கு அக்கறையில்லை. நான் சொல்லவந்துள்ள விஷயத்திற்கும் சம்பிரதாயமான தொழில்முறை சிறந்ததா, நவீனமுறை சிறந்ததா என்ற கேள் விக்கும் சம்பந்தம் கிடையாது. உண்மையில் நான் இங்கே நடக்க வேண்டுமென்று எண்ணுவது நவீனத்திலும் நவீனமான பொருள் உற்பத்தி முறையே. நான் விரும்புவது, சமூக விஞ்ஞானம் உள்ளிட்ட எல்லா விஞ்ஞானங்களின் உதவியை யும் கொண்டு இதுவரை வேறு எங்குமே நடந் திராததும், இப்போதும் நடக்காததுமான பொரு ளாதார ஏற்பாட்டையே. அதாவது, யந்திரங்களைக் கொண்டு தொழில்கள் நடத்துவதையும் அதற் கேற்ப சமூக, பொருளாதார அமைப்பையும் நாம் புதிதாய்ப் படைத்தாக வேண்டும். நான் சொல்லு வது குவியல் முறைப் பொருளாதாரத்தில் மிகவும் முன்னேறியுள்ள மேனுடுகளிலோ, ஜப்பானிலோ கூட நடவாத ஒன்று. அங்கெல்லாம் உள்ள பரவல் ஏற்பாடு குவியல் முறைக்கு அடங்கி, அதன் ஏவ லுக்குட்பட்டு இருப்பதோடு, குவியல் முறையே தான் வாழ்வதற்கு பரவல் முறையை நம்பியிருக் கிறது. நான் சொல்லும் ஏற்பாட்டிலோ பரவல் முறையின் கையே ஓங்கி நிற்கும்; குவியல் முறை தவிர்க்க முடியாத அளவிலேயே அனுமதிக்கப் படும். இவையிரண்டிற்கும் ஒருவகைப் பொருத் தம் இருக்கவேண்டு மென்பதில் சந்தேகமில்லை யாயினும், பரவல் அமைப்பு குவியல் அமைப்புக்

குட்பட்டதாகவோ, அடங்கியதாகவோ இருத்தல் அறவே கூடாது.

இரண்டாவதாக, நான் பரவல் பொருளாதாரத்தை வற்புறுத்துவதற்குக் காரணம் அது ஜனநாயக முறைக்குப் பொருத்தமானது என்பது மட்டுமல்ல, பரவல் முறை ஏற்பாட்டில் நன்மைகள் மக்களுக்கு வெகு விரைவிலும் உடனுக்குடனும் போய்ச் சேருமென்பதுமாகும். எப்படியென்ருல், இந்த முறையில் ஏராளமானவர்களுக்கு உடனடியாக வேலையளிக்க முடியுமென்பதோடு, உற்பத்தியாகும் பொருள்களை உடனுக்குடன் எங்கும் விநியோகிப்பதும், தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய கூலியை அவர்கள் உண்டாக்கிய பொருள்களாகவே தரவும் முடியும். இதற்கு மாருக, குவியல் முறையிலோ கைத்தொழில் வளர்ச்சியின் பலன்கள் சிறிதுசிறிதாக இறங்கி அடித்தளத்திலுள்ளவர்களுக்கு எப்போதோ எட்டும்வரை காத்திருக்க வேண்டியிருக்கும். மேல் நாடுகளில் இது நடப்பதற்கு 100 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. ஜீவாதாரமான குறைந்தபட்சத் தேவைப் பொருள்கள் கிடைப்பதே அரிதாய் இருப்பதும், வேலையில்லாமையாலும் அரை குறை வேலையாலும் நாட் கணக்காகவோ மாதக் கணக்காகவோ எண்ணிலடங்காத பேர்கள் அவதிப்படுவதுமான இந்தியாவைப் போன்ற பரம ஏழையான நாட்டிற்கு மிகவும் தேவையாயிருப்பது, பரவல்முறை ஏற்பாடு அல்லது பொது மக்களின் நன்மையில் கருத்து பொருளாதார அபிவிருத்தியின் நோக்கமாய் இருத்தலேயன்றி குவியல் முறையல்ல.

மூன்ருவதாக, மேலே விவரிக்கப்பட்டுள்ள

வகையில் நாட்டின் பொருளாதாரத்தை அமைப்பதற்கு கிராமாந்தரங்களில் அளிக்கப்படும் கல்வியை முற்றிலும் மாற்றியாகவேண்டும். இதற்கு இப்போதுபோல் புத்தகங்களைக் கொண்டே கல்வியளியாது கைத்தொழில்களையும், அதிலும் முக்கியமாக விவசாய முறைகளையும் பிள்ளைகளுக்குப் போதிக்க வேண்டும். கல்வி முறையில் செய்யப்படவேண்டிய மாறுதல்களை நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட பரிசோதனைத் திட்டத்தின் பகுதியாகக் கருதவேண்டும். மேலும், கிராமந்தரக் கல்வியில் பேரளவில் நேரிடையாகச் செய்வதன் மூலம் முதியோருக்கெல்லாம் கல்வி பெறுவதற்கு வசதி செய்து தரவேண்டும். இம்மாதிரியான கல்வியளிக்கப்படுகையில் இதிலிருந்தே இதையெல்லாம் நடத்துவதற்கு வேண்டிய ஆட்களுக்கு என்ன செய்வதென்ற கேள்விக்கும் பதில் கிடைக்கும். அதாவது, இவ்விதக் கல்வி பெறும் பிள்ளைகளும் முதியோருமே பரவல் பொருளாதார அமைப்பை நிறுவவும் நிர்வகிக்கவும் உதவுவார்கள்.

இறுதியாக, நம் நாட்டின் அசாதாரண நிலையில், வெளி நாடுகளின் உதவியை நம்பி பிரம்மாண்டமான திட்டங்கள் வகுப்பதே கௌரவமென்று கருதப்படுகையில், மத்திய அரசாங்கம் பணம் முழுவதையும் தன்னிடமே வைத்துக் கொண்டு இஷ்டமானதை மட்டுமே இராச்சியங்களுக்கு விநியோகித்தல் இயல்பே. இந்நிலையில் மத்திய அரசாங்கத்திற்கு அளவுக்கு மீறிய அதிகாரங்களும் அந்தஸ்தும் ஏற்படவும், அதற்கு அடங்கியுள்ள பகுதிகளெல்லாம் அதன் தயவுக்காகக் காத்திருக்க வேண்டியிருப்பதைப் பார்க்

கிறோம். வெளிநாடுகளிடம் உதவி பெறுதலென்ற சிக்கலான விஷயத்திலும், அதனுல் நம் பொருளாதார வளர்ச்சியும் நாட்டின் பொது வாழ்வின் எல்லா அம்சங்களுமே எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்ற சர்ச்சையிலும் இறங்காது, அதனுல் நம் ஜனநாயகம் திருப்திகரமாக வளர்வது பாதிக்கப்படுவதைக் குறிப்பிடுவதோடு நிறுத்திக் கொள்கிறேன். பொதுவாக பரவல் பொருளாதார அபிவிருத்தி எல்லாவற்றிலுமே குவியல் ஏற்பாட்டில் போல் வெளி நாட்டின் உதவியையோ மத்திய அரசாங்கத்தின் தயவையோ அவ்வளவு நாட வேண்டியிராது. இதற்குள்ள முக்கியமான காரணங்கள் மூன்று. அவை, (1) இம்முறையில் கூலிக்காகவன்றி தாமாக ஏராளமான தொழிலாளர் வேலைசெய்ய முன்வருவார்கள்; (2) மக்களிடமுள்ள சிறிய சேமிப்புகள் குவியல் முறையில் விட பரவல் முறையில் அதிகம் வெளிவந்து பயன் படுத்தப்படும்; (3) நிர்வாகச் செலவு, போக்குவரத்துச் செலவு முதலிய உபரிச் செலவுகள் மிகவும் குறையும். எனவே, இவ்வகையில் பார்க்கையில் பரவல் பொருளாதாரம் ஜனநாயக தத்துவத்தோடு அதிகம் பொருந்துவது என்பது தெளிவு.

IV
ஜனநாயகம் அமுலாதல்

பஞ்சாயத்து ஆட்சி அமைப்பதற்கான முயற்சி அதிக உறுதியான, மக்கள் ஆதரவு பெற்ற திருப்திகரமான ஜனநாயக ஆட்சியை நிறுவுவதற்கான ஏற்பாடாயினும், சரியாக நடத்தப்பட்டால் மக்களை சுயராஜ்யத்தை அனுபவிக்கச் செய்யக்கூடியதாயினும் அது மட்டுமிருந்தால் போதாது. ஜனநாயகக் கட்டிடம் உறுதியாகவும் ஆபத்தில்லாமலும் இருந்து வருவதற்கு அதன் மேல் தளங்களை அடியிலுள்ள அஸ்திவாரத்தில் நன்கு புகுத்திப் பொருத்தி அமைக்க வேண்டும். இப்போது நடப்பதைப் பார்த்தால் அடிக்கட்டிடம் மாவட்டம் வரையிலேயே எழுப்பப்படப் போகிறது, மேலேயுள்ள மத்திய அரசாங்கப் படிகளின் அமைப்பு முற்றிலும் வேருய் இருக்கும், அது ஒன்ருேடொன்று இணையாத வாக்காளரென்ற மணல் குவியல்களின் மீதே நிற்கும் என்று தெரிகிறது. இது ஒன்றுக்கொன்று மாருன இரு தனித் தத்துவங்களின் பொருந்தாத கூட்டாகும். இவ்வாறு அமைந்துள்ள ஜனநாயகம் எண்ணெயும் நீரும் போல் ஒரு பொழுதும் சேரமாட்டா. இந்த இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளைப் பின்வருமாறு சுருக்கமாகச் சொல்லலாம் :

தனி வாக்காளர்களின் வாக்கின்மீது அமைக்கப்பட்டுள்ள முறை அநேகமாக உச்சியிலுள்ளவர்கள் கையில் அதிகாரம் முழுவதையும் கொண்டு சேர்ப்பதாயிருக்க, நாம் சொல்லும் முறையிலோ

அதிகாரங்கள் பரவலாக பலரிடம் கொடுக்கப்படும். முந்திய ஏற்பாட்டில் கட்டுப்பாடுள்ள கட்சிகள் இருக்கும் ; அந்தக் கட்சிகள் சக்தி வாய்ந்த சிறு குழுவினரால் இயக்கவும் ஆட்டி வைக்கவும் படும். மறு ஏற்பாட்டிலோ மக்கள் சமூகங்களும் அவைகளின் பிரதிநிதிகளும் கீழேயிருந்தே தக்க முடிவுகள் செய்வதற்கு உதவுவார்கள். முன் ஏற்பாட்டில் உதிரியாய், கட்டுப்பாடின்றி இருக்கும் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாய் இருக்கமாட்டார்கள் ; அவர்களைக் கட்டுப்படுத்தவும் முடியாது. பிந்திய முறையிலோ தேர்ந்தெடுக்கும் நிறுவனங்கள் தாம் மேல் படிகளுக்கு அனுப்பி வைக்கும் பிரதிநிதிகளோடு நீடித்த தொடர்பு கொண்டு, அவர்களை ஒன்றைச் செய்யுமாறும் இன்னொன்றைச் செய்யாதிருக்குமாறும் ஏவிக் கொண்டிருக்கும். முந்திய முறையில் மக்களின் பங்கு தேர்தல் சமயத்தில் வாக்களிப்பதோடு சரி. பிந்திய முறையிலோ கிராம சபைகளின் மூலமும் மேலேயுள்ள பிரதிநிதி ஸ்தாபனங்களின் மூலமும் மக்கள் அனைவரும் நெருங்கிக் கலந்து கொள்வதற்கு இடமிருக்கும். முந்திய ஏற்பாட்டில் தேர்தல்களுக்கு ஏராளமான செலவு செய்ய வேண்டியிருக்க, பிந்திய ஏற்பாட்டில் செலவே ஆகாது. முந்திய ஏற்பாட்டில் பெரிய பொதுக் கூட்டங்கள் நடத்துவதும் அவை சியமாக ஒருவரை யொருவர் திட்டுவதும் சில சமயங்களில் நிகழ, மற்றதிலோ இத்தீமைகள் பெரிதும் குறைக்கப்பெறும். முந்திய முறையில் பெரும்பாலான வாக்காளர்களுக்கு நாட்டின் முன்னுள்ள முக்கியப் பிரச்னைகள் தெரியாமலோ, தெரிந்திருந்

தும் அவற்றில் அக்கறை யில்லாமலோ இருப்பது சாத்தியமாயிருக்க, பிந்திய ஏற்பாட்டில் ஒவ்வொரு படியையும் சேர்ந்த வாக்காளருக்கும் தமக்குச் சம்பந்தமுள்ள பிரச்னைகள் நன்கு தெரிந்திருக்கும்.

மேலே குறிப்பிட்ட வித்தியாசங்களுள் சிலவற்றை சிறிது விவரித்தல் உபயோகமாயிருக்கும். முதலில், அதிகாரமெல்லாம் தனித்தனி வாக்குக்களைக் கொண்டு அமைக்கப்படும் ஜனநாயகத்தில் உச்சிப்படியிலுள்ளவர்கள் கையில் எல்லா அதிகாரங்களும் குவியும் என்று சொன்னதை எடுத்துக்கொள்வோம். இது ஜீவாதாரமான விஷயமாயிருந்தும் இதன் முக்கியத்துவம் சரியாக உணரப்படவில்லை. இந்த ஜனநாயக ஏற்பாட்டில் மேலே சேர்ந்துள்ள அதிகாரத்தை கீழேயுள்ள மக்களிடம் இழுத்துக் கொண்டு வரக்கூடிய சக்தி எதுவுமில்லை. வாக்காளர்கள் லட்சக்கணக்கிலும், கோடிக்கணக்கிலும் இருந்தும் கட்டுப்பாடான முறையில் அதிகாரம் உறிஞ்சப்பட்டு மேலே கொண்டு போகப்படுவதைத் தடுப்பதற்கு அவர்களிடம் ஒரு சாதனமும் இல்லை. அரசியல் கட்சிகள் இருக்கும், அவற்றில் உறுப்பினரும் லட்சம் கோடிக்கணக்கில் இருப்பர். ஆனால் எங்குமே—ஜனநாயகக் கட்சிகளிலும் கூட—காலத்தின் போக்கு அதிகாரம் முழுவதையும் தலைவர்களின் சிறு குழுக்களின் கையில் சேர்ப்பதாகவே இருக்கிறது. சில விசேஷ நலன்களை—அதிலும் முக்கியமாக பொருளாதார நலன்களைக் கவனிக்கும் நிறுவனங்கள், குழுக்கள் சில இருந்தும், அவையும் தம் செல்வாக்கை அதிகாரம் செலுத்துவோரைத் தமக்குச் சாதகமாக்குவதற்குப் பயன்படுத்துவதி

லேயே முனைந்திருக்கின்றன. குவியல் அரசியல் ஏற்பாட்டிற்கு பொருளாதாரக் குவியல் ஏற்பாடும் உதவி, ஒத்துப்பாடுவதை ஏற்கெனவே குறிப்பிட்டோம். தொழிலாளர் சங்கங்களும், கூட்டுறவு ஸ்தாபனங்களும் இவை போன்ற பிற நிறுவனங்களும் இந்த அரசியலமைப்பின் அடித்தளத்தைப் பரவலாக்க உதவுகின்றன என்பது உண்மையாயினும், இவையெல்லாமே ஜனநாயக அமைப்போடு நன்கு பொருந்துமாறு அமைக்கப்படாததுடன், இவைகளும் வர வர தலை பருத்தும், ஒரு சிலரிடம் அதிகாரம் முழுவதையும் சேர்த்துக் கொண்டும் வருகின்றன. செய்தித்தாள்கள் அதிகாரம் வகிப்போரை, அதிகாரமுள்ள இடங்களை ஓரளவு மாற்றி வருகின்றனவாயினும் இவற்றையே மக்களென்று கொள்வதற்கில்லை.

அடுத்தபடியாக, வாக்காளர்களுக்கு தம் பிரதிநிதிகள் மீதுள்ள அதிகாரத்தை அவர்களை ஏவி வேலை வாங்குவதற்கு எவ்வளவு தூரம் பயன்படுத்த முடியும் என்பதைப் பார்ப்போம். அமுலிலுள்ள முறையில் வாக்காளருக்கு தாமே தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தவோ, ஏவவோ வசதி இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்டவர் தமக்கு திருப்தியாகுமாறு நடந்துகொள்ளவில்லை, வேலை செய்யவில்லையென்று அவர்கள் அவரை அடுத்த தேர்தலில் தேர்ந்தெடுக்காதிருக்கலாம். ஆனால் இது பல வாண்டுகளுக்குப் பிறகு நடக்கப் போவதாகையால் அதனல் பெரிய நன்மை எதுவும் விளையப் போவதில்லை. இந்த மக்கள் பிரதிநிதிகள் குறிப்பிட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்களாய் இருப்பார்

களாகையால் அந்தக் கட்சிகளால் அவர்களை ஓரளவு கட்டுப்படுத்த முடியுமாயினும் கட்சியின் கட்டுப்பாடு என்பது வேறு, வாக்காளர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பது என்பது வேறுதான்.

இந்த எல்லாக் காரணங்களுமாகச் சேர்ந்து இந்த வகையான ஜனநாயகத்தை எல்லா வகையிலும் பயனற்றதாயும், ஏமாற்று வித்தையாயும் செய்துவிடுகின்றன.

ஆனால் நான் கூறும் மக்கள் பங்கு கொண்டு நடத்தும் ஜீவனுள்ள ஜனநாயகத்திலோ நிலைமை முற்றிலும் மாறிவிடுகிறது. இந்த ஜனநாயக அமைப்பு அடிப்படியான கிராம சபையில் தொடங்கி, லோக சபை என்ற உச்சிப்படி வரையில் ஒன்றின்மீது ஒன்ருய் அமைக்கப்படுவதாலும், ஒவ்வொரு படியின் அதிகாரங்களும் வேலைகளும் கடமைகளும் வருவாய்களும் திட்டவட்டமாய் வரையறுக்கப்படுவதாலும், இதில் அதிகாரம் முழுவதும் பல படிகளிடையிலும் விநியோகமாகாது இருக்க முடியாது. மேலும், மேல் படிகளெல்லாம் அவற்றின் கீழேயுள்ள படிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்படுபவையாகையால் அதிகாரம் கீழேயிருந்து மேலே போகுமேயன்றி, மேலேயிருந்து கீழே செலுத்தப்படுவதற்கு அதிக இடமில்லை. இதே காரணத்தினால் மேல் படிகளிலுள்ள பிரதிநிதிகள் கீழ்ப்படிகளில் உள்ளவர்கள் பார்வையில் எப்போதும் இருப்பார்களாகையால் இவர்களுக்குக் கட்டுப்பட்டே இருக்க வேண்டியிருக்கும். எந்தப் படியில் உள்ள பிரதிநிதிகளும் தனி நபர்களின் உதிரிக் கூட்டமாய் இராது, அதிகாரபூர்வமாய், கட்டுப்பாடாக

அமைந்தும், வரையறுக்கப்பட்டுள்ள பொது அதிகாரங்களும் வேலைகளும் உள்ளவையாயும் இருக்கும்.

இந்தச் சிறிய விளக்கம் இருவகை ஜனநாயகங்களுக்குமுள்ள முக்கியமான வித்தியாசங்களைத் தெரிந்து கொள்ள உதவும். பஞ்சாயத்து ஆட்சி மாவட்டத்தினளவில் நின்றுபோய், அதற்கு மேலேயெல்லாம் கட்சிகளின் ஆட்சியே நடந்து வருமானால் மக்களுக்கு அது நிச்சயமாய் ஏமாற்றமே அளிக்கும். இந்தப் பொருத்தமில்லாத ஏற்பாட்டிற்கு அரசியல் தலைவர்களுக்கு அதிகாரத்தை விட்டுப் பிரிய மனமில்லாமையே காரணமென்று அவர்கள் அர்த்தம் செய்து கொள்வார்கள். அவர்களுக்கு அதிகாரமெல்லாம் இன்னும் தில்லியிலும் இராச்சியத் தலைநகரங்களிலுமே அடைபட்டுக் கிடப்பதாகவும், தமக்கு வழங்கப்பட்டிருப்பது சரியான சுத்தப் பாலல்ல, மாவு கரைத்த தண்ணீரே என்றும் தோன்றினால் அதைத் தவறென்றும் சொல்ல முடியாது. இம்மாதிரியாக மக்கள் தாம் ஏமாற்றப்பட்டதாய் நினைக்க இடமளிப்பது பேராபத்துக்களிலேயே கொண்டுவிடும்.

ஆகையால் பஞ்சாயத்து ஆட்சியை மாவட்டத்தின் அளவில் நிறுத்தாது புது தில்லி வரையில் விஸ்தரிக்க வேண்டும். இதை இப்பொழுதே செய்ய முடியாவிட்டாலும் இதையே இலட்சியமாய்க் கொள்ளுதல் நலம்.

நம் தேர்தல் முறையிலுள்ள குறைபாடுகளை பிரதம மந்திரி உள்ளிட்ட நாட்டின் அரசியல் தலைவர்கள் பலரும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இதை காங்கிரஸ் தலைவரான திரு. சஞ்சீவ ரெட்டி

சென்றவாண்டில் பவநகரில் எடுத்துச் சொன்னர். ஆனல் தேர்தல் முறையிலுள்ள குறைகள் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் நேர்முகத் தேர்தல், மறைமுகத் தேர்தல் என்ற இரண்டின் சாதக பாதகங்களைப்பற்றிப் பேசுவதும், அமுலிலுள்ள நேர்முகத் தேர்தலில் ஏராளச் செலவாவதாலும் அது சாதி சமூக வேற்றுமைகளை வளர்த்து விடுவதாலும் கூடாதென்று கூறுவதுமே வழக்கமாயிருக்கிறது. இது ஓரளவுக்கு சரியென்பதிலும் சந்தேகமில்லை.

இவ்வாறு தேர்தல் முறைகளை இரண்டாகக் குறிப்பிட்டுப் பேசுவதில் தவறில்லையாயினும், மக்களுக்கு திருப்தியளிப்பதும் நிர்வாகத்தில் அதிகப் பங்கு அளிப்பதுமான ஜனநாயக ஆட்சியின் தன்மை எவ்வாறு இருக்கவேண்டும் என்ற முக்கியமான விஷயம் மறக்கப்பட்டுப் போகிறது. இதையே வேறு வகையில் சொன்னல், இதில் நாம் உண்மையில் கவனிக்க வேண்டியது, அதிகாரத்தைப் பிரித்துக் கொடுத்தலும் நிர்வாகத்தைப் பரவல் முறையில் நடக்கச் செய்தலுமே என்பது கவனிக்கப் படுவதில்லை. நான் ஏற்கெனவே விவரித்துள்ளபடி அதிகாரத்தைப் பிரித்துக் கொடுத்தலோ, நிர்வாகத்தைப் பரவல் முறையில் அமைத்தலோ, (1) தற்போதைய இராச்சியப்படியின்கீழ் சுய ஆட்சி நிறுவனங்களோ கேந்திரங்களோ இல்லாதபொழுதும், (2) அரசாங்கத்தின் எல்லாப்படிகளுமே அமைப்பிலும் நிர்வாகத்திலும் ஒன்றோடொன்று இணைந்து பொருந்தியும், ஒவ்வொரு மேல்படியும் அடுத்த கீழ்ப்படியிலிருந்தும், எல்லாமே பரந்த அஸ்திவாரமான வயதுவந்த மக்கள் அனைவரையும் தன்னுள் கொண்டுள்ள

கிராம சபைகளிடமிருந்தும் அதிகாரமும் ஆதரவும் பெருதபொழுது சாத்தியமில்லே.

ஒவ்வொரு ஆட்சி முறையிலுமே குறைகளும் கோளாறுகளும் இருக்கத்தான் செய்யும். இந்தப் பஞ்சாயத்து ஆட்சி அல்லது மக்கள் கலந்து கொண்டு நடத்தும் ஜனநாயகத்திலும் குறைகள் இருக்கும்தான். ஆனல் இதில் ஜனநாயக அம்சம் அதிகமிருப்பதும், குறைகளிருந்தால் அவற்றைச் சுலபமாகத் திருத்தி விடலாமென்பதும்தான் இதை நான் மற்றவற்றைவிடச் சிறந்தது என் பதற்குக் காரணங்கள். பஞ்சாயத்துத் தேர்தல் களே போட்டியில்லாது ஏகோபித்து நடத்துகையில் பல குறைகளே ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்து விடலாம்.

இப்போது நாம் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம், பஞ்சாயத்து ஆட்சியை மேல்படிகளுக் கும் கொண்டு போவது எப்படி என்பதைப் பார்த் தலே.

நான் முன் எழுதியிருந்த கட்டுரையில் ஒவ்வொரு கீழ்ப்படியும் அடுத்த மேல்படியைத் தேர்ந்தெடுத்தலே நியாயம், அதாவது கிராமப் பஞ்சாயத்துக்கள் வட்டார சமிதிகளேயும், அவை மாவட்ட பரிஷத்தையும், பரிஷத்துகள் மாநில அசெம்பிளியையும், அசெம்பிளிகள் லோக சபை யையும் தேர்ந்தெடுத்தலே சரியென்று சொல்லியி ருந்தேன். ஆனல் பிறகு யோசித்ததில் இந்த முறை அவ்வளவு விரும்பத் தக்கதல்லவென்று தோன் றிற்று. இந்த ஏற்பாட்டிற்கு முக்கியமாக இரண்டு ஆட்சேபங்கள் சொல்லப்படலாம். ஒன்று, இது குறுகிய மனப்பான்மை வளரவும், தனி பிரஜை

களும் கீழேயுள்ள ஜனநாயக நிறுவனங்களும் இராச்சிய அளவிலும் மத்திய அரசாங்க அளவிலும் உள்ள ஏற்பாடுகளை உருவாக்குவதில் தமக்குப் பங்கில்லாமையால் பொறுப்பும் இல்லையென்று எண்ணவும் இடம் கொடுக்குமென்பது. இரண்டாவது, முதல்படியில் தவிர மேலேயுள்ள ஒவ்வொரு படியிலும் இருக்கக்கூடிய வாக்காளர் தொகை மிகவும் குறைவாயிருக்குமாகையால் பணம் படைத்தவர்கள் அவர்களை சுலபமாய்த் தம் கையில் போட்டுக் கொண்டு விடுவார்களென்பது.

இப்போது அமுலிலுள்ள முறையிலும் இதே குறைபாடுகள் சிறிது அதிகமாகவோ குறைவாகவோ புகக் கூடுமே என்று இதற்கு பதில் சொல்லிவிடலாம். ஆனால் நாம் ஆலோசிக்கும் ஏற்பாட்டில் இக் குறைகளைப் போக்குவதெப்படி என்று பார்க்க வேண்டுமே தவிர, அவைகளையே காரணமாய்ச் சொல்லி அதை ஒதுக்குதல் சரியல்ல; இதற்கு இதே குறைகள் ஏராளமாகவுள்ள இப்பொழுதைய ஏற்பாட்டையே விடாது பற்றிக் கொண்டிருத்தலும் பரிகாரமாகாது.

தாற்காலிகமாக சட்ட சபைத் தேர்தல்களுக்கும் லோக சபைத் தேர்தல்களுக்கும் கீழ்க்கண்ட முறையைப் பின்பற்றலாமென்பது என் யோசனை. நான் இந்தக் கட்டுரையில் எந்த ஜனநாயக அமைப்பை ஆதரித்துப் பேசி வந்திருக்கிறேனோ அதன் தன்மையைப் பாதிக்காமலே, நான் சொல்லும் முறையைப் பின்பற்றினால் மேலே கூறப்பட்டுள்ள ஆட்சேபணைகளுக்கும் பரிகாரம் ஆகிவிடும்.

முறைப்படி கூட்டப்பட்ட பொதுக் கூட்டத்தில் தேர்வு கவுன்சில் எனப்படும் தேர்வு

காலேஜுக்கு கீழே கண்டமுறையில் இரு பிரதி நிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :

அந்தக் கூட்டத்தில் பெயர்களை பிரஸ்தாபிக்கு மாறு அழைத்து, பிரஸ்தாபித்து ஆமோதிக்கப் பட்ட எல்லாப் பெயர்களும் எல்லோரும் பார்க்கும் படியாக விளம்பரப் பலகையில் எழுதப்படும். பிரஸ்தாபிக்கப்பட்ட பெயர்கள் இரண்டாகவே இருந்தால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளாகக் கொள்ளப்படுவார்கள். அவ்வாறின்றி இரண்டுக்கு அதிகமான பெயர்கள் பிரஸ்தாபித்து ஆமோதிக்கப்பட்டுவிடும்பொழுது, ஒவ்வொருவர் பெயரையும் வரிசையாகச் சொல்லி அவர்களை எவ்வளவு பேர்கள் ஆதரிக்கிருர்கள் என்பதை கையை உயர்த்தச் சொல்லுவதன் மூலம் அறிந்து, ஒவ்வொருவருக்கும் கிடைத்த வாக்குகளை அவரவர் பெயருக்கு எதிரில் விளம்பரப் பலகையில் முதலில் குறித்துவிட வேண்டும். பிறகு இதே தேர்வைத் திரும்பத் திரும்ப நடத்தி அதிகமான வாக்குகள் பெற்ற இரண்டு பெயர்களை மட்டும் நிறுத்திக் கொண்டு, மற்றவைகளை நீக்கி விடவேண்டும். இதை ஒவ்வொரு தடவையும் வாக்கெடுக்கும் பொழுது முந்திய வாக்கெடுப்பில் மிகவும் குறைந்த ஆதரவு பெற்றுள்ளவர் பெயரை நீக்குவதன் மூலம் செய்யலாம். இது மிகவும் சுலபமான, செலவில்லாத முறை. கிராம சபைகள் கூட்டங் கள் நடத்தியும், வரவு செலவுத் திட்டங்கள் நிறை வேற்றியும், இன்னும் பலவற்றை எல்லாரும் சேர்ந்து செய்தும் அனுபவம் பெறப் பெற, இதை நடத்துதல் அவைகளுக்கு வெகு சுலபமான காரியங்களுள் ஒன்ருய் ஆகிவிடும். முதலில்

இதை நடத்துவதில் சிரமங்கள் தோன்றினாலும் பஞ்சாயத்துத் தலைவர் வழி துலக்க, இதைச் செய்து செய்து ஒத்திகை பார்ப்பதனால் அவை நீங்கிப்போம்.

அடுத்தபடியாகச் செய்ய வேண்டியது தேர்வுக் கவுன்சிலைக் கூட்டுவதாகும். அதாவது, சம்பந்தப்பட்ட தேர்தல் தொகுதிகளிலுள்ள கிராம சபைகளிலிருந்து இராச்சிய சட்டசபைக்கோ லோக சபைக்கோ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் ஸ்தலத்திலேயே உள்ள ஒரு மத்திய இடத்தில் கூடுதல். தேர்வுக் கவுன்சிலின் வேலை தேர்தலுக்கு ஆட்களைப் பொறுக்கியெடுத்து நிறுத்துவதாகும். அதற்கு கீழ்க்கண்ட முறையைப் பின்பறலாம்:

முதலில் பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட வேண்டும். பிறகு பிரஸ்தாபித்து ஆமோதிக்கப்பட்ட ஒவ்வொரு பெயரின் மீதும் வாக்குகள் எடுக்க வேண்டும். 30 சதம் என்பது போன்ற குறிப்பிட்ட ஓர் எண்ணுக்குக் குறையாது வாக்குப் பெற்றவர்கள் இராச்சிய சட்ட சபைக்கோ, லோக சபையானால் அதற்கோ, அந்தத் தொகுதியிலிருந்து தேர்வுக்கு நிற்க அனுமதிக்கப்பட்டதாக அறிவிக்க வேண்டும்.

ஜனநாயக தத்துவம்—அது எந்த வகையைச் சேர்ந்ததாயினும்—பாதுகாக்கப் படுவதற்கு அதில் பின்பற்றப்படும் நடைமுறைகள் கூடிய வரையில் பிளவுகள் தோன்றக் காரணமாயில்லாமல், ஒற்றுமைக்கும் இணக்கத்திற்கும் உதவுபவையால் இருத்தல் அவசியமென்று நான் நினைப்பதால் ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் தேர்வுக் கவுன்சிலே ஒன்றுக்கதிகமாய் ஆட்களை

நிறுத்தாதிருக்குமாறு சட்ட ரீதியாகவும் பிரசாரத்தின் மூலமும் செய்யப் பார்க்க வேண்டும். பார்க்கப் போனுல் ஒரு ஸ்தானத்திற்கு எவ்வளவு பேர் நிறுத்தப்பட்டாலும், எந்த முறையில் தேர்தல் நடந்தாலும், ஒவ்வொரு தொகுதிக்கும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் (ஒரு அங்கத்தினர் தொகுதிகளில்) ஒருவரே. ஜனநாயக தத்துவமோ—நியாயத்திற்குப் பொருத்தமல்ல வாயினும்—பிரதிநிதி ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால் தேர்தலில் அவருக்கு எவ்வளவு பலமான எதிர்ப்பு இருந்திருப்பினும் அவரே தம் தொகுதி முழுமைக்கும் பிரதிநிதி யென்றும், அவர் தம்மை எதிர்த்தவர்களுக்கும் ஆதரித்தவர்களுக்குப் போலவே பணியாற்ற வேண்டுமென்றும் விதிக்கிறது. இதிலுள்ள பொருத்தமின்மையையும் அவசியமில்லாது ஆவேசம் தோன்றி சக்தியும் பணமும் பாழாவதையும் தேர்வு கவுன்சிலே ஒவ்வொரு தொகுதிக்கும் ஒருவரை மட்டுமே நியமனம் செய்யுமாறு செய்ய முடிந்தால், தவிர்க்கலாம். இதைச் செய்ய முடியாது போகையிலும், இது நடக்கக் கூடாதது என்று தோன்றுகையிலும் மேலே கூறப்பட்ட முறையில் பொறுக்கப்பட்டவர்கள் நிறுத்தப்பட்டிருப்பதாக அறிவித்து விடலாம். பிறகு இறுதித் தேர்தலே கீழ்க்கண்ட முறையில் நடத்த வேண்டும் :

தேர்வுக் கவுன்சில் பொறுக்கி, தேர்வுக்கு நிறுத்தும் நபர்களின் பெயர்களே சம்பந்தப்பட்ட தொகுதியிலுள்ள கிராம சபைகளுக்கு அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு கிராம சபையும் பொதுக் கூட்டமொன்று கூட்டி, நிறுத்தப்பட்டுள்ள ஒவ்

வொருவர் பெயருக்கும் தனித்தனியே வாக்கு எடுக்கவேண்டும். இதற்கு கீழே கண்டவற்றுள் ஒரு முறையைப் பின்பற்றலாம் :

(1) ஒவ்வொரு கிராம சபையிலும் எவருக்கு அதிகமான வாக்குகள் கிடைக்கின்றனவோ அவரே அதற்கு மேலுள்ள சபையில் பிரதிநிதியாக இருக்கத் தகுதி பெறுவார். இவ்வாறு எல்லா கிராம சபைகளிலிருந்தும் அதிக வாக்குகள் பெற்று வருகிறவர்களுள் முதலிடம் வகிப்பவர், அல்லது எல்லோரிலும் அதிக ஆதரவு பெறு பவர் இறுதியில் இராச்சிய சபைக்கோ லோக சபைக்கோ தேர்ந்தெடுக்கப் பட்டவராவார். அல்லது,

(2) தேர்தலுக்கு நிறுத்தப்படும் ஒவ்வொரு நபருக்கும் கிராம சபையின் பொதுக் கூட்டத்தில் கிடைக்கும் வாக்குகள் பதிவு செய்யப்படும். பிறகு ஒவ்வொருவருக்கும் தேர்தல் தொகுதி முழு வதிலுமுள்ள பல்வேறு கிராம சபைகளிலும் இவ்வாறு கிடைக்கும் வாக்குகளெல்லாம் கூட்டப் படும். இவ்வாறு கூட்டியதில் அதிகமான வாக்கு கள் பெற்றவர் அந்தத் தொகுதிக்கு பிரதிநிதி யாவார்.

இந்த முறையில் தேர்தல் நடத்தப்படுகையில் பல நன்மைகள் ஏற்படுமென்பது தெளிவு. ஒரு நன்மை, அது இந்த ஜனநாயக அமைப்பின் மேல் தளங்களை அடித்தளத்தோடு பொருத்தி இணைப்ப தோடு, கிராம சபைகளுக்கு மதிப்பும் வலுவும் ஏற்படுமாறு செய்து, ஊர் சாதி அபிமானம் போன்ற நோய்கள் அவற்றைப் பற்றுது பாதுகாக் கும். இரண்டாவது நன்மை, நாட்டின் ஒவ்வொரு

பிரஜைக்கும் ஜனநாயக அமைப்பின் மேல்படியிலுள்ள சபைகளுக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க நேரிடையான வாய்ப்பளிப்பதோடு, அதையும் கட்டுப்பாடும் ஒழுங்குமுள்ள முறையில் கிராம சபைகள், தேர்வுக் கவுன்சில்கள் ஆகியவற்றின் மூலம் செய்வதால் தம் பிரதிநிதிகளிடம் போதிய செல்வாக்குப் பெறவும் உதவும். இவ்வாறு ஏற்கெனவே கையாலாகாதவர்களாய் மணல் துணுக்குகளைப் போல் தனித்தனியே பிரிந்திருந்தவர்கள் இப்போது ஒன்றோடொன்று இணைந்து இறுகிய கற்கள்போல் ஆகிவிடுவார்கள். வலுவான கற்களை அஸ்திவாரமாய் இட்டு அதன்மீது எழுப்பப்படும் கட்டிடத்தின் தன்மையே வேறு, மணலின் மீது கட்டியதின் தன்மையே வேறுதான் அல்லவா ?

V

இடைக்காலமும் பொதுத் தேர்தலும்

ஏற்கெனவே கூறியுள்ளபடி இங்கே விவரிக்கப்பட்டுள்ள ஜனநாயக அமைப்பின் கீழ்ப்படிகள் பிரதம மந்திரியும் திரு. எஸ். கே. டேயும் சிரத்தையெடுத்துக் கொண்டதனால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு சென்ற ஆண்டில் நடந்த காங்கிரஸ் மகாசபையின் கூட்டமும் முழு ஆதரவு அளித்திருக்கிறது. இந்த அமைப்பை மேல் தளங்களுக்கும் விஸ்தரித்துக் கொண்டு போவதற்குச் சிறிது காலமாகும் என்பது தெரிந்ததே. இதற்கிடையில் வரும் பிப்ரவரி மாத இறுதியில் மூன்று

வது பொதுத் தேர்தல் நடக்க விருக்கிறது. அடித்த ளத்திலிருந்து ஜனநாயகத்தை அமைத்து வளர்க்க விரும்புவோர் நடக்கவிருக்கும் தேர்தலில் தம் கருத்துக்களுக்கு இடமே இல்லையா வென்றும், பஞ்சாயத்து ஆட்சியை உச்சி வரையில் விஸ்தரித் துக்கொண்டு போவதற்கு இந்த இடைக்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன வென்றும் யோசித்தல் இயல்பு.

தேர்தல் காலமென்பது மும்முரமாக அரசியல் வேலைகள் செய்தும், பொதுக்கூட்டங்கள் நடத்தி யும் மக்களுக்கு விஷயங்களை விவரித்துச் சொல் லும் காலம். எனவே தேர்தல் பிரசாரங்களில் இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லுவதனால் வரவிருக்கும் புதிய பார்லிமெண்டும் சரி, பொது மக்களும் சரி தேவையான அரசியல் ஏற்பாடுகளின் மூலம் பஞ்சாயத்து ஆட்சி அமைப்பில் எஞ்சியுள்ள இரண்டு மேல் தளங்களையும் எழுப்புவதற்குச் சித்தமாக்கப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுதல் இயல்பே. எனவே இந்தக் கருத்துக்களை ஆத ரிக்கும் எல்லாக் கட்சிகளும் நபர்களும் மும்முர மாக முனைந்து, கட்டுப்பாடுடன் பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்ட முயல வேண்டும். இதற்கு பல்வேறு கட்சிகள், சர்வ சேவா சங்கம் போன்ற பொதுஜன சேவையை நோக்கமாய்க் கொண்டுள்ள நிறுவனங்கள், இயக்கங்கள் ஆகிய வற்றின் பிரதிநிதிகளும் பிற அனுதாபிகளும் ஒன்று சேர்ந்து தாம் செய்யவேண்டியவை குறித்து பொதுவான திட்டம் வகுத்துக் கொள்ளுதலும், பிறகு ஒப்புக்கொள்ளப்பட்ட அக்கருத்துக்களையும் யோசனைகளையும் முக்கியமாக வாக்காளர் முன்பும்,

பொது மக்கள் முன்பும் இடுதலும் அவசியம்; அவர்கள் செய்தித் தாள்களின் ஆதரவைப் பெறவும் வேண்டும். ஏனெனில் அவைகளே பொதுஜன அபிப்பிராயத்தைத் திரட்டுபவை, உருவாக்குபவை. அதோடு இடைவிடாமல் கூட்டங்கள் கூட்டி இது பற்றிப் பேசவும், சந்தேகங்களுக்கு பதில் சொல்லவும், காரண காரியங்களுடன் விளக்கிக் கூறி ஆதரவு தேடவும் வேண்டும்.

நடத்தப்படவிருக்கும் பிரசாரத்தில் பஞ்சாயத்து ஆட்சி பற்றிய எல்லா விஷயங்களும், அதன் எல்லா அம்சங்களும் இடம்பெறவேண்டுமா யினும் மற்றவையெல்லாம் வாக்காளருக்கு தேர்தல் பிரசாரத்திற்கு சம்பந்தமில்லாதவை யென்று ஒருக்கால் தோன்றினுல், தேர்தலோடு நெருங்கிய, நேரிடையான சம்பந்தமுள்ள ஒரு விஷயத்தை நான் முக்கியமாய் வற்புறுத்த விரும்புவேன். நான் இங்கே குறிப்பிடுவது வாக்காளர் கவுன்சில் மூலம் தேர்தலுக்கு ஆட்களைப் பொறுக்கி நிறுத்துதல் பற்றியது.

எனது முதல் கட்டுரையில் கட்சிகள் தேர்தலுக்கு ஆட்களை நிறுத்துதல் வாக்காளர்களைக் கட்டுப்படுத்துவதாகவும், அவ்வகையில் ஜனநாயக தத்துவத்தின் மகிமை குறைந்து போகுமென்றும் சொல்லியிருந்தேன்; அந்த ஏற்பாட்டில் தேர்தலுக்கு நிற்க விரும்புவோர் தாம் நிறுத்தப்படுவதற்காக கட்சித் தலைவர்களைக் காக்காய் பிடித்து அவர்கள் தயவைச் சம்பாதிக்கப் பார்த்தல் இயல்பென்றும் குறிப்பிட்டிருந்தேன். இது குவியல் முறைக்குதவும் அம்சங்களை வலுப்படுத்தி, அதிகாரம் ஒரே இடத்தில் குவிய உதவி, ஜனநாயகத்தை

பலவீனமாக்கும்; இதனால் மக்களே—அதாவது வாக்காளர்களே தேர்தலுக்கு ஆட்களைப் பொறுக்கி நிறுத்துவதற்கான முறை யொன்றைக் கண்டு பிடிக்க வேண்டுமென்றும், அதைச் செய்தால் அது அதிகாரத்தை மேலேயிருந்து கீழே வலித்துக் கொணர்ந்து மக்களுக்குக் கொடுக்கும், அப்போது ஜனநாயகத்தின் ஒரு முக்கியமான நடவடிக்கையில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுவதால் தேர்தலில் தமக்குப் பங்குண்டு என்பதை உணர்வார்கள் என்று சொல்லியிருந்தேன். இப்போது நடந்துவரும் முறையில் தேர்தலுக்கு நிற்போரெல்லாம் மக்கள் அபிப்பிராயத்தைக் கேளாமலே கட்சிகளால் நிறுத்தப்படுபவராயிருக்க, நான் சொல்லும் முறையில் அவர்கள் மக்களே நிறுத்தியவர்களாய் இருப்பார்களாகையால் இது மக்களுக்கு ஜனநாயகத்தில் சிரத்தை ஏற்படுவதற்கு பெரிதும் உதவும். வரும் பொதுத் தேர்தலில் இக்கருத்தைப் புகுத்தப்பார்த்தல் பொருத்தமானதும் முக்கியமானதுமாகுமென்று நினைக்கிறேன். ஏனெனில், இது தேர்தலோடு நெருங்கிய, நேரிடையான சம்பந்தமுள்ளது மட்டுமல்ல, இந்த முறை நடக்கவிருக்கும் தேர்தலை உருப்படியான முறையில் மாற்றவும் கூடும். இம்முறையை ஆதரித்து பிரசாரம் செய்வதோடு நிறுத்தாமல், சாத்தியமான இடங்களிலெல்லாம் இதை அமுலுக்கும் கொண்டு வரவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. இதை குறிப்பிட்ட சில தொகுதிகளில் மட்டுமே இப்போது நடத்த முடிந்தாலும் அங்கே பெறப்படும் அனுபவம் நமக்கு மிகவும் உதவுவதாயிருக்கும்.

பிந்திய அத்தியாயத்தின் இறுதியில் தேர்வுக்

கவுன்சில்கள் மூலம் தேர்தலுக்கு ஆட்களைப் பொறுக்கும் முறையொன்று கூறப்பட்டது. வரும் தேர்தலுக்குமுன் நாடு முழுவதிலும் சட்ட பூர்வமாய் கிராம சபைகள், அமைக்கப்பட்டு, இதற்கென அவைகளைக் கொண்டு தேர்வுக் கவுன்சில்களை உருவாக்குதல் சாத்தியமில்லாதிருக்கலாம். ஆயினும் ஒரு தேர்தல் தொகுதி முழுவதிலும் கிராம சபைகள் அமைக்கப்பட்டு விட்டால், அங்கே சென்ற அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட முறையை மக்கள் சம்மதத்தோடு பின்பற்றலாம். இவ்வாறு கிராம சபைகள் இன்னும் அமைக்கப்பட்டாகாத தொகுதிகளில் இதே போன்ற ஒரு முறையைப் பின்பற்றி தாற்காலிக வாக்காளர் கவுன்சில்கள் அமைத்துக்கொள்ளலாம். அதாவது, தொகுதியை பல சிறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு, அந்தப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் உள்ள வாக்காளர்களின் கூட்டம் நடத்தி, அக்கூட்டங்களில் இரண்டு அல்லது அதிகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம். பிறகு இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வாக்காளர் கவுன்சில் என்ற பெயரில் ஒன்று கூடி தேர்வுக் கவுன்சிலை அமைத்த முறையிலேயே ஒன்று அல்லது அதிகமான பிரதிநிதிகளைப் பொறுக்கியெடுக்கலாம். இந்த சந்தர்ப்பத்தில் போட்டிக்கு இடமில்லாதிருப்பதற்காக ஒரே நபரைத் தீர்மானிப்பதன் அவசியம் ஏற்கெனவே வற்புறுத்தப் பட்டிருக்கிறது. அதே காரணங்களுக்காக வாக்காளர் கவுன்சில்கள் நடத்தும் இந்தத் தேர்தலையும் அதே முறையில் நடத்த வேண்டுமென்று சொல்லத் தேவையில்லை.

பொதுத் தேர்தல் சம்பந்தமாக நான்

இன்னொரு யோசனையும் சொல்ல விரும்புகிறேன். இந்த யோசனை என்னுடையதல்ல, வினோபா அடிகளினுடையது. அவர் இதை மிகவும் வற்புறுத்தியிருக்கிறார். அதாவது, தேர்தல் பிரசாரங்களில் இப்போது போட்டியிடும் நபர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் தனித்தனியே கூட்டங்கள் நடத்துவது வழக்கமாயிருக்கிறது. இதிலுள்ள பிற சிரமங்கள் நிற்க, இந்த முறை ஒவ்வொரு கட்சியாரும் பிற கட்சிகளைப் பற்றி அவதூறுகள் சொல்லவும், நாக்கில் நரம்பில்லாமல் பேசவும் இடமளிக்கிறது. இதோடு நில்லாது மக்களிடையே சாதி சமய துவேஷங்களையும் பிற விரோதங்களையும் கிளப்பி வளர்க்க சந்தர்ப்பமளிக்கிறது. இவையெல்லாமாகச் சேர்ந்து பொதுவாழ்வின் தரத்தைக் குறைத்து ஜனநாய முறைக்கு இருக்க வேண்டிய கௌரவத்தைப் பாதிப்பதோடு, வாக்களிக்க வேண்டிய பொதுமக்கள் மனத்தைக் குழப்பவும், தேவையில்லாத விஷயங்களை அறிவித்து அவர்களை என்ன செய்வதென்று தெரியாது திகைக்க வைக்கவும் செய்வதால், அவர்கள் விருப்பு வெறுப்பின்றி தாம் யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தீர்மானிக்க முடியாமற் செய்து விடுகின்றன. அதோடு கூட இதில் அவசியமில்லாமல் ஆகும் செலவோ சொல்லி முடியாது.

தேர்தலுக்கு நிற்கும் எல்லா நபர்களும் அவர்களை ஆதரித்து பிரசாரம் செய்வோரும் ஒரே மேடையில் கூடி தம் கட்சியை எடுத்துச் சொல்லவும், மற்றக் கட்சியாரிடம் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டவும் செய்தால் மேலே குறித்த குறைகளையெல்லாம் அறவே நீக்க முடியாவிட்டாலும்,

வெகுவாகக் குறைத்து விடலாம். இந்தக் கூட்டங்களில் பேசுவோர் அனைவருக்கும் ஒரேயளவு நேரமளித்து, அவர்கள் பேசி முடிந்ததும் மகா ஜனங்கள் தமக்குள்ள சந்தேகங்களைக் கேட்டு விளக்கம் பெறுவதென்று வைத்துக் கொள்ளலாம்.

இந்த முறையை பல்வேறு கட்சிகளும் அல்லது தேர்தலுக்கு நிற்கும் சம்பந்தப்பட்ட நபர்களும் —அவர்கள் கட்சிகளின் சார்பில் நிற்பவர்களோ, மக்களால் நிறுத்தப்பட்டவர்களோ, சுதந்திரமாய் நிற்பவர்களோ யாராயிருந்தாலும்—இதற்கென தம்முள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு நடத்தலாம். அல்லது ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள வாக்காளர்கள் தேர்தலுக்கு நிற்போர் அனைவரையும் ஒரே மேடையில் சேர்ந்து வந்து தம் கட்சிகளை எடுத்துச் சொல்லுமாறு கேட்பதென்று முடிவு செய்யலாம். இவ்வாறு கூட்டுக் கூட்டங்கள் நடத்தும் முறை அமுலுக்கு வந்து விடுகையில் தேர்தல் செலவுகள் வெகுவாகக் குறைந்துபோகும் என்று சொல்லத் தேவையில்லை.

நம் ஜனநாயகம் செம்மையாக முன்னேறி வளர்வதில் அக்கறையுள்ளவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து வரும் பொதுத் தேர்தலில் நாடு முழுவதிலும் இல்லாவிட்டாலும், பெரும்பாலான தொகுதிகளில் இந்த முறையைப் பின்பற்றுவதற்குத் தேவையானவைகளைச் செய்தல் நலம்.

1937-இல் நடந்த தேர்தலில் பீகார் மாகாணத்தைச் சேர்ந்த **பூர்ணியா** மாவட்டத்திலுள்ள சமேலி என்ற ஒரேயொரு கிராமத்தில் மேலே கூறிய முறை அனுஷ்டிக்கப்பட்டதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த கிராம மக்கள்

தேர்தலுக்கு நிற்போர் அனைவரும் ஒரே கூட்டத்திற்கு வந்து, ஒரே மேடையிலிருந்து தம் கட்சிகளை எடுத்துச் சொல்லச் சம்மதிக்காவிட்டால் தம் கிராமத்தில் தேர்தல் கூட்டங்களை நடத்தவிட மாட்டோமென்று முன் கூட்டியே அறிவித்துவிட்டார்கள். அவர்கள் விருப்பத்தை பல கட்சியாரும் ஒத்துக் கொண்டு அங்கே ஒரே கூட்டம் நடத்தவும் செய்தார்கள். 1937-இலேயே சமேலி கிராமத்திலுல் செய்ய முடிந்த இதை 1962-இல் எல்லா கிராமங்களிலுலும் செய்ய முடியாதா ?

இங்கே விவரிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் நடை முறைக்கு வந்து பயன் படுவதற்கு, பொருளாதாரம் அல்லது அரசியல் விஷயங்களில் பயிற்சியளிப்பதிலோ அல்லது நேரிடையாகச் செய்து பார்ப்பதிலோ நாம் செய்யும் முயற்சிகளை கிராமங்களோடு நிறுத்திக் கொள்ளாது நகரங்களுக்கும் கொண்டு போதல் அவசியம். பஞ்சாயத்து ஆட்சியிலும் சரி, சமூகநலத் திட்டங்களிலும் சரி நகரங்கள் தனியே ஒதுக்கப்பட்டிருப்பது, நாமும் அவ்வாறு ஒதுக்காதிருப்பதற்கு முக்கியமான காரணமாகும்.

நான் ஏற்கெனவே பஞ்சாயத்து ஆட்சியின் கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றைப் போன்ற முறையில் நகரங்களிலும் சுய ஆட்சியை எவ்வாறு அமைக்கலாமென்பதைக் குறிப்பிட்டிருக்கிறேன். இயன்றவிடங்களிலெல்லாம் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கி, வெகு விரைவிலேயே தேவையான முறையில் அமுலிலுள்ள நகரசபைச் சட்டங்களைத் திருத்த வேண்டும். இதற்கு வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளை நகர

சபைத் தலைவர்கள் மாநாடுகளோ, அகில இந்திய பஞ்சாயத்து பரிஷதோ எடுக்கலாம்.

அதற்கிடையில் இப்போதுள்ள சட்டங்களுக் குட்பட்டே இக்கருத்துக்களை இயன்ற அளவு அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயல வேண் டும். உதாரணமாக, நகர நிர்வாக விவகாரங்களில் கட்சி அரசியலைப் புகவிடாது பார்த்துக் கொள்ளும் படி பொதுமக்களுக்கும் பல்வேறு அரசியல் கட்சி களுக்கும் சொல்லி, அவர்களை சம்மதிக்கச் செய்ய லாம். அதாவது, பல்வேறு அரசியல் கட்சிகளும் தம் கட்சிகளின் சார்பில் நகரசபைத் தேர் தல்களில் ஆட்களை நிறுத்துவதில்லை என்று ஒத்துக் கொள்ளலாம். அந்தத் தேர்தல்களுக்கும் மேலே விவரிக்கப்பட்ட முறையில் வாக்காளர் கவுன் சில்கள் மூலம் ஆட்களைப் பொறுக்கியெடுக்கலாம். அதே வகையிலும், அதே காரணங்களுக்காகவும் தேர்தல்களில் போட்டிகளையும் சமூகத்தில் பிளவு களையும் தவிர்க்க வேண்டி, போட்டியின்றி ஏகோ பித்தே எல்லாப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுத்தல் வேண்டும். நான் ஏற்கனவே சொல்லியுள்ளபடி ஜனநாயகம் தழைத்துச் செழிப்பதற்கு சமூகத் தில் முன்னரேயுள்ள வேற்றுமைகளையும் வித்தி யாசங்களையும் விரோதங்களையும் நாம் பின்பற்றும் முறையினால் வளரச் செய்யாது, சிறிது சிறிதாகக் குறைக்கவும், அறவே நீக்கவும் வேண்டி மக்களி டையே பொது நலனுக்காக பொதுவுணர்ச்சியை யும் பொது முயற்சியையும் வளர்த்தல் அவசியம்.

இச்சுருக்கமான கட்டுரையை முடிக்கும் தரு ணம் வந்துவிட்டது. நான் இச்சிறு பிரசுரத்தில் ஒவ்வொரு குடிமகனும் நேரிடையாகப் பங்கு

கொண்டு இந்திய ஜனநாயகத்தை அசைக்க முடியாத கோட்டையாக்குவதற்கு உதவக்கூடிய அரசியல் வேலைத் திட்டமொன்றை வகுத்துத் தந்திருக்கிறேன். தற்சமயம் நாட்டின் அரசியல் சூழ்நிலை முறுக்கேறி, படபடப்பும் நிச்சயமின்மையும் பொருந்தியதாயிருக்கிறது. விரல் விட்டு எண்ணி விடக்கூடிய ஒரு சில தலைவர்களின் கையில் நாட்டின் தலையெழுத்து அடங்கி விட்டதைக் காண்கிறோம். இது சிறிதும் உறுதியில்லாத நிலைமை. இதனால் விளையக்கூடிய பிற ஆபத்துக்கள் ஒரு புறம் இருக்க, இதனால் நாட்டினால் பட்சவாதம் வந்தவனால் போன்று எதையுமே செய்ய முடியாமற் போகலாம். இதற்குள்ள ஒரே பரிகாரம் மக்கள் தம் பொறுப்பையுணர்ந்து, தம் விதியைத் தாமே வகுத்துக் கொள்வது என்ற முடிவுடன் செயலில் இறங்குதலேயாகும். இதைச் செய்வதற்கான வழியொன்று இங்கே காட்டப்பட்டிருக்கிறது. மக்கள் இதைச் செய்ய முன் வருவார்களா? முன் வராவிடில் நம் நாட்டிற்கு நல்ல எதிர்காலம் இல்லையோ என்று ஐயுறவே வேண்டியிருக்கும்.

இந்நூலில்

திரு ஜெயப்பிரகாஷ் நாராயண்

நம் நாட்டு ஆட்சியை மக்கள் கலந்து கொண்டு நடத்தும் சுயராஜ்யமாக்க வேண்டும்,

அதை பஞ்சாயத்து ஆட்சியையே எவ்வாறு திருத்தியும் விரித்தும் செய்யலாம்,

அதற்கு வரவிருக்கும் பொதுத் தேர்தலிலேயே என்னென்ன செய்ய வேண்டும்

என்பவைகளை மறுக்க முடியாத காரணங்களுடன் தமக்கே உரிய கவர்ச்சியான நடையில் கூறியிருக்கிறார்.

சர்வோதயப் பிரசுராலயம்

தஞ்சாவூர்